Your Real Estate Investment Consultant
Dedicated for your success
OPPORTUNITIES ARE WAITING...
CALL ME FOR A FREE CONSULTATION
BUY
SELL
INVEST
DIVAGARAN MANIKKAVASAGAR
416.888.7877
www.divhomes.com

33ஆவது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

துரித பணமாற்றுச் சேவை
மு. காசிப்பிள்ளை சக புத்திரர்கள்
3228 Eglinton Ave. E. Suite #3
(Eglinton & Markham)
Scarborough ON M1J 2H6
Tel: 416-267-8221
எமக்கு வேறு கிளைகள் எங்கும் இல்லை

நதி: 33 | பாலம்: 11 | சமூக முன்னேற்றப்பத்திரிகை | மாதமிருமுறை | இலவசம் | JUNE 01, 2023

# ரொறொன்ரோ நகர முதல்வர் தேர்தல்

ரொறொன்ரோ நகர முதல்வருக்கான இடைத்தேர்தல் 2023 யூன் 26ஆம் திகதி. ரொறொன்ரோ நகர முதல்வராக இருந்த ஜோன் ரோறி 2023 பெப்பிரவரி 17ஆம் திகதி நகர முதல்வர் பதவியில் இருந்து விலகினார். அதைத் தொடர்ந்து துணை நகர முதல்வராக இருந்த ஜெனிபர் மெக்கெல்வி பதில் நகர முதல்வராகப் பதவி ஏற்றார். இதைத் தொடர்ந்து ரொறொன்ரோவின் நகர முதல்வருக்கான இடைத்தேர்தல் 2023 யூன் 26ஆம் திகதி நடைபெறும் என ரொறொன்ரோ நகர எழுதுவினைஞர் அலுவலகம் அறிவித்தது. அத்துடன் அது நகர முதல்வருக்கான வேட்பாளர் பதிவு ஏப்பிரல் 3ஆம் திகதி ஆரம்பமாகி மே 12ஆம் திகதிவரை நடைபெறும் எனவும் அறிவித்தது.

ரொறொன்ரோ நகர முதல்வர் தேர்வு "ஒருவருக்கு ஒரு வாக்கு" என்ற முறையில் நடைபெறும் (first-past-the-post). இத்தேர்தலில் அதிகூடிய வாக்குகளைப் பெற்றவர் நகர முதல்வராகத் தெரிவு செய்யப்படுவார். இந்த இடைத்தேர்தல் நடத்த $13 மில்லியன் செலவாகும் என எதிர்பார்க்கப்படுகிறது. நகர முதல்வருக்கான தேர்தல் யூன் 26ஆம் திகதி நடைபெற்றாலும், வாக்காளர் தமது வாக்குகளை முன்கூட்டியே யூன் 8ஆம் திகதியில் இருந்து யூன் 13ஆம் திகதிவரை பதிவு செய்யலாம். வழக்கமாக நகரசபைத் தேர்தலில் பெரும்பாலான மக்கள் வாக்களிப்பது இல்லை. ரொறொன்ரோ மாநகரசபைப் பகுதியில் அண்ணளவாக 2 மில்லியன் வாக்காளர் வாக்களிக்கத் தகுதியுள்ளவர்களாக உள்ளனர்.

2022இல் நடைபெற்ற நகரசபைக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானவர்களில் 30%ஆனவர்களே தமது வாக்குகளைப் பதிவுசெய்திருந்தனர். அத்தேர்தலில் 31 பேர் நகர முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டிருந்தனர். அவர்களில் ஜோன் ரோறி 342,158 வாக்குகளைப் பெற்று வென்றிருந்தார். அவர் வாக்களித்த 30%ஆனோரில் 62%ஆன வாக்குகளைப் பெற்றிருந்தார்.

2018ஆம் ஆண்டில் நடைபெற்ற நகரசபைக்கான தேர்தலில் வாக்களிக்கத் தகுதியானவர்களில் 41%ஆனவர்கள் தமது வாக்குளைப் பதிவு செய்திருந்தனர். அத்தேர்தலில் 35 பேர் நகர முதல்வர் பதவிக்குப் போட்டியிட்டிருந்தனர். அவர்களில் ஜோன் ரோறி 479,659 வாக்குகளைப் பெற்று வென்றிருந்தார். அவர் வாக்களித்த 41%ஆனோரில் 63%ஆன வாக்குகளைப் பெற்றிருந்தார்.



Acting Mayor Jennifer McKelvie

இம்முறை 2023 யூன் 26ஆம் திகதி நடைபெற இருக்கும் தேர்தலில் 102 வேட்பாளர் போட்டியிடுகின்றனர். தற்போதைய ரொறொன்ரோ நகரசபை அமைக்கப்பட்ட பின்னர் நகர முதல்வருக்கான தேர்தலில் போட்டியிடும் அதிகூடிய எண்ணிக்கையான வேட்பாளர் 102 ஆகும். இதற்கு முன்னர் 2014ஆம் ஆண்டில் நடைபெற்ற நகர முதல்வருக்கான இடைத்தேர்தலில் அதிகூடிய எண்ணிக்கையான வேட்பாளர் நகர முதல்வருக்குப் போட்டியிட்டிருந்தனர். அத்தேர்தலில் 65பேர் நகர முதல்வருக்குப் போட்டியிட்டிருந்தனர். இத்தேர்தலில் 40% வாக்குகளைப் பெற்று ஜோன் ரோறி நகர முதல்வராகத் தெரிவானார்.

யோர்க் பல்கலைக்கழகத்தின் அரசியல் விஞ்ஞான இணைப் பேராசிரியரான டெனிஸ் பைலன் (Dennis M. Pilon) CTV ஊடகத்திற்கு வழங்கிய பேட்டியில் இம்முறை நடைபெறும் நகர முதல்வருக்கான இடைத்தேர்தல் மிகவும் சுவாரசியமான மற்றும் விநோதமான முடிவைத் (Interesting and Bizarre) தரலாம் என்றார். அவர் இந்த ஆண்டு நடைபெறும் தேர்தல் பிரச்சாரத்தைத் தனித்துவமாக்குவதற்குப் பல காரணிகள் உள்ளன என்றார். முன்னர் நகர முதல்வராக இருந்தவர் எவரும் இம்முறை போட்டியிடவில்லை. இம்முறை தேர்தல் பிரசாரகாலம் குறைக்கப்பட்டுள்ளது. மிகவும் குறைந்த வாக்காளர்களே தமது வாக்குகளைப் பதிவர் என எதிர்பார்க்கப்படுகிறது. இது ஓர் இடைத்தேர்தல், அதனால் மக்கள் இத்தேர்தலில் அதிக கவனம் செலுத்தவில்லை. இம்முறை நகர முதல்வரை ஒரு மிகச்சிறிய குழுவினர் தேர்ந்து எடுக்க வாய்ப்பு உள்ளது. இம்முறை நகரசபைத் தேர்தல் தற்செயலாக ஒரு நகரத் தலைவரைத் (Accidental Mayor) தெரிவு செய்ய வாய்ப்பு உள்ளது என அவர் தெரிவித்தார்.

2 மில்லியன் வாக்களிக்கத் தகுதியுள்ள வாக்காளர்களைக் கொண்ட ரொறொன்ரோ நகரத்தில் ஒரு மிகச் சிறிய பகுதியினரே கனடாவின் மிகப்பெரிய பெருநகரத்தின் அடுத்த நகர முதல்வராக யார் பணியாற்றுவது எனத் தீர்மானிக்கப் போகின்றனர். இந்த நகர முதல்வர் ரொறொன்ரோ நகரின் 16 பில்லியன் வருடாந்த வரவு-செலவுத் திட்டத்தை நடைமுறைப்படுத்துவதுடன், ரொறொன்ரோ நகரசபையின் 25 உறுப்பினர்கள் எடுக்கும் முடிவுகளை தனது வீற்ரோ (Veto) அதிகாரத்தால் மாற்றும் திறனையும் கொண்டவர் ஆவார்.

நகரசபைத் தேர்தலில் போட்டியிடுவோர் கட்சி சார்பு அற்றவர்களாகக் கருதப்பட்டாலும் அவர்களில் மத்திய, மாகாண கட்சிகளில் பதவி வகித்தவர்கள் வேட்பாளர்களாகப் பதிவு செய்யப்பட்டபடியால்

தொடர்ச்சி 07 பக்கம்

BUY & SELL THROUGH ME & SEE THE DIFFERENCE!
Kannan Nadarajah
416-889-1083
kannanhomes143@yahoo.com
Homelife/Future Realty Inc.

வீடு வாடகைக்கு வாங்க மற்றும் விற்க அழையுங்கள்
www.ParaCity.ca
647-296-0596
TisiPara@gmail.com
Para Tisikulasingam
647 296 0596

வீடு வாடகைக்கு... வாங்க/ விற்க...
Rathiga Thillaivannan
Broker
Dir: 647.839.0079
info@rathigahomes.ca
www.rathigahomes.com
Re/Max Realtron Realty Inc.

Homelife GTA Realty
BUY/ SELL /LEASE
www.vanyhome.ca/
Life Insurance &
Super Visa Insurance
www.vjsfinancial.ca
Vany Jeganmohan CLU,CHS
REALTOR & INSURANCE ADVISOR
416-670-7436
Real Estate
Insurance

FOR ALL YOUR REAL ESTATE NEEDS
GEORGE PARANTHAMAN
georgeparan1@gmail.com
416-277-9044
HomeLife GTA Realty Inc.
TRUTH BUILDS TRUST

BUYING / SELLING HOMES
BALA MANI MBA
Sales Representative
Contact: 647-290-1022 | 0605bala@gmail.com | visit: www.realtorbala.ca
* Lawyer Fee, Moving Cost, Staging all Free of Cost.
HomeLife/GTA Realty Inc. Brokerage*
5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S 0C2
* We help to find your best future home!

Welcoming new patients of all ages since 2000 at ...
Bridletowne Dental
Dr. Jeyapalan, BDS., DDS.
(University of Toronto) Dentist
416 492 3775
Bridletowne Dental
385 Silver Star Blvd, Suite 217 Scarborough, M1V 0E3
(Midland & McNicoll, MAXUM Building, In the RONA PLAZA)
www.bridletownedental.com










MaRadha
HOTEL
Colombo | Sri Lanka
sales@maradha.lk | +94112550136



# For All Your Private Mortgage Needs

8T Capital
Mortgage Administration # 13073



**AYNGKARAN SIVA**
Business Development Manager
Mobile: (647) 670-0320
ayngkaran@8twelve.capital
Website: www.8Twelve.capital



**JUTHIS KUPER**
Broker Relations Associate
Mobile: (647) 670-2078
juthis@8twelve.capital
Website: www.8Twelve.capital

- NOT Income Driven
- NOT Credit Driven
- Equity Based Lender
- Common Sense Lending Approach
- Interest Only Payments
- Flexible Terms
- Commitment issued less than 24 Hours
- Fast Funding within 2 to 3 business days
- 1st Mortgages, 2nd Mortgages, Debt Consolidation & Refinances
- Construction & Contractor Programs
- Flexible & Creative
- No Hidden Fees or Bait and Switch

***Available 7 days a week***




Available Till Midnight
Including Weekends & Holidays

ANTON
DHARMASEELAN
MORTGAE AGENT

#1 Mortgage Agent in GTA
#2 in Canada

CALL ME FIRST
FOR ALL YOUR MORTGAGE NEEDS

PURCHASE
REFINANCE
SELF EMPLOYED
BAD CREDIT
INVESTMENT PROPERTY
RENEWAL

MAJOR BANKS
ALTERNATIVE LENDERS
B LENDERS
CREDIT UNIONS
TRUST COMPANIES
PRIVATE LENDERS

416 704 1200

anton@myhomemls.ca

MORTGAGE ALLIANCE
Broker # 10530
#200, 2005 Sheppard Ave. E.
Toronto, ON M2J 5B4

FAX: 1 866 566 3068

# தமிழரசுக் கட்சிக்கு உள்ள பொறுப்பு




இலங்கைத் தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைவர் யார் என்கின்ற எதிர்பார்ப்பு கட்சி உறுப்பினர்களிடம் மட்டுமன்றி தமிழ் தேசியக் கூட்டமைப்பின் பங்காளிக் கட்சிகளிடமும் ஏற்பட்டுள்ளது. இதேவேளை, தமிழரசுக் கட்சிக்குள் தலைமைத்துவத்திற்கான பலமான போட்டியும் நிலவுகின்றது.



இந்தப் போட்டியில் சி.சிறிதரன், எம்.ஏ.சுமந்திரன், சீ.வீ.கே. சிவஞானம் ஆகிய மூவரின் பெயர்களே வெளிப்படையாக அடிபடுகின்றன. தலைமைப் போட்டிக் களத்தில் இவர்கள் மூவருமே நிற்பதாக தழிழரசுக் கட்சியின் தற்போதைய தலைவர் மாவை சேனாதிராஜாவும் தெரிவித்திருக்கின்றார்.

இதேவேளை, இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பொதுச்சபைக் கூட்டமும் வருடாந்த மாநாடும் தொடர்ச்சியாக பிற்போடப்பட்டு வருகின்றமையானது இந்த தலைமைத்துவப் போட்டியை சமாளிப்பதற்காகவா? அல்லது மாவை சேனாதிராஜாவின் தலைவர் பொறுப்பை மேலும் நீடிப்பதற்காகவா? என்கின்ற கேள்விகளும் எழுகின்றன.

கட்சி தொடர்பான விரிவாக்க நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்ட பின்னரே பொதுச் சபை கூட்டமும், வருடாந்த மாநாடும் நடைபெறும் என்று தெரிவிக்கப்படுகின்றது.

தமிழரசுக்கட்சியின் வட்டாரக் கிளைகள் தெரிவு செய்யும் செயற்பாடுகள், யாழ்ப்பாணம், திருகோணமலை, அம்பாறை, மட்டக்களப்பு, முல்லைத்தீவு மற்றும் மன்னார் உள்ளிட்ட மாவட்டங்களில் முழுமையடையாதுள்ளதாகவும், இந்தப் பணிகள் பூர்த்தி செய்யப்பட்ட



பின்னர், கட்சியின் தலைவர், செயலாளர், பொருளாளர் மற்றும் மத்தியகுழு உறுப்பினர்கள் உள்ளிட்ட பதவி நிலைகளுக்கான விண்ணப்பங்கள் கோரப்படும் என்றும் கட்சியின் தலைவர் மாவை சேனதிராஜா தெரிவிக்கின்றார்.


தலைமைப் போட்டி தொடர்பில் சி.சிறிதரன் பொதுவெளியில் பெரிதாக கருத்துரைக்காவிடினும் உள்ளே அதற்கான நகர்வுகளை மேற்கொண்டு வருவதாகத் தெரிகின்றது. சுமந்திரனும் தனக்கான செல்வாக்கை அதிகரிப்பதற்கான செயற்பாடுகளை முன்னெடுத்து வருகின்றார். அவர் வடக்கிலும், கிழக்கிலும் உள்ள கட்சி உறுப்பினர்களுடன் தொடர்பாடல்களை மேற்கொண்டு வருகின்றார். கிழக்கில் மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியனுடன் சுமந்திரனுக்கு நெருக்கமான உறவு உள்ளது என்பதும் குறிப்பிடத்தக்கது.

இந்நிலையில், தமிழரசுக் கட்சிக்கு தலைமை ஏற்கும் விருப்பத்தை சீ.வீ.கே. சிவஞானம் பொதுவெளியில் தெரிவித்து வருகின்றார். அனைவரும் ஏகமனதாக தன்னை தெரிவு செய்தால் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைமையினை ஏற்கத் தயாராக இருப்பதாக அவர் அண்மையில் ஊடகவியலாளர் சந்திப்பு ஒன்றில் தெரிவித்துள்ளார். கட்சியின் மூத்த துணைத் தலைவராக சீ.வீ.கே. சிவஞானம் இருந்து வருகின்றார். இதனால் அடுத்த தலைவர் பதவி தனக்கு கிடைப்பதில் பிரச்சினை இருக்காது என அவர் நம்புகின்றார்.

ஆனால், பதவிக்காக கட்சிக்குள் போகவில்லை எனவும், போட்டியில்லாமல் அனைவரினதும் ஒத்துழைப்போடும் இணக்கப்பாட்டோடும்தான் தெரிவு செய்யபட்டால் தமிழரசுக் கட்சியின் தலைமைப் பொறுப்பினை ஏற்றுக் கொள்ளத் தயாராக இருப்பதாகவும் அவர் ஊடக சந்திப்பில் தெரிவித்துள்ளார்.

தமிழ் தேசியம் சார்ந்த அனைத்துக் கட்சிகளையும் இணைத்து அரவணைத்துச் செல்லக்கூடிய தலைமையே இலங்கை தமிழரசுக் கட்சிக்கு அவசியமானது என்பதே தமிழ் மக்களின் எதிர்பார்ப்பாகவுள்ளது, தமிழ் தேசியக் கூட்டமைப்பு பிளவுபட்டமைக்கு தமிழரசுக் கட்சியே காரணம் என்பது தமிழ் மக்களது பொதுவான கருத்தாகவுள்ளது.

தமிழ் தேசியக் கூட்டமைப்பில் தாங்களே முதன்மையானவர்கள் - தாங்கள் மேற்



கொள்ளும் தீர்மானங்களுக்கு பங்காளிக் கட்சிகள் இணங்கிச் செல்ல வேண்டும் என்கின்ற எண்ணம் தமிழரசுக் கட்சியினருக்கு உள்ளது என்பது வெளிப்படை.

எதிர்வரவுள்ள உள்ளூராட்சி மன்றங்களுக்கான தேர்தலில் தனித்துப் போட்டியிட்டு தமிழரசுக் கட்சியின் செல்வாக்கினை வெளிப்படுத்தும் நோக்கம் தமிழரசுக் கட்சிக்கு உள்ளது. ஆனால், அதனை தீர்மானிக்கும் சக்தி மக்கள் என்பதை தமிழரசுக் கட்சி புரிந்துகொள்ள வேண்டும். தமிழ் தேசியம் சார்ந்த அனைத்துக் கட்சிகளும் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதையே தமிழ் மக்கள் விரும்புகின்றனர். அதனை தமிழரசுக் கட்சியின் புதிய தலைமை ஏற்றுக்கொண்டு செயற்பட்டால் நல்லது.

தமிழ் தேசியம் சார்ந்த கட்சிகள் அனைத்தும் இணைந்து தமிழ் தேசியக் கூட்டமைப்பாக செயற்படுவதற்கான தீர்மானம், தமிழரசுக் கட்சியின் பொதுச் சபைக் கூட்டத்தில் நிறைவேற்றப்படும் என தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராஜா அண்மையில் தெரிவித்திருக்கின்றார்.

இதனைத்தான் மக்கள் எதிர்பார்க்கின்றனர் என்பதை மாவை சேனதிராஜா இப்போதுதான் உணர்கின்றாரா? அல்லது தனது பதவிக் காலம் முடிகின்ற வேளையில் இவ்வாறானதொரு கருத்தை முன்வைக்க வேண்டும் என்று விரும்புகின்றாரா? அல்லது வரப்போகும் தலைமைக்கு இதனை சொல்லி வைக்க விரும்புகின்றாரா? இதனை அவரிடம் தான் கேட்க வேண்டும்.

தமிழரசுக் கட்சி தனித்துவமான கட்சியாக உருவாக வேண்டும் என்பது அக்கட்சிக்குள் இருக்கும் அனைவரதும் எண்ணமாக உள்ளது. சிறிதரனோ, சுமந்திரனோ, சீ.வீ.கே. சிவஞானமோ இதில் மாறுபாடனவர்கள் அல்ல. அதேவேளை, தமிழ் தேசியக் கூட்டமைப்பு என்கின்ற பெயரை தள்ளிவைக்கவும் முடியாது என்கின்ற யாதார்த்தையும் அவர்கள் உணராமலில்லை.

எனவே, தமிழரசுக் கட்சியின் அடுத்த தலைமை யாராக இருந்தாலும் தமிழ் தேசியக் கூட்டமைப்பில் அனைத்துக் கட்சிகளும் சம பங்காளிகள் என்கின்ற கோணத்தில் செயற்படுவதே சிறந்தது. இலங்கை தமிழரசுக் கட்சி ஆதிக்க சக்தியாக இல்லாமல் அனைவரையும் அரவணைத்துச் செல்லும் தாய்க் கட்சியாக இருப்பதில் பிரச்சினை இல்லை.

கசப்பான உண்மைகளை
வெளிப்படையாக சொன்னால்
பல உறவுகள்
பிரிந்துவிடுவதால் தான்,
இனிப்பான பொய்களை
பலபேர் அழகாக
சொல்லிக்கொண்டு
இருக்கின்றார்கள்...!!

விளம்பரம்
VLAMBARAM
33ஆவது ஆண்டில்
பதிப்பாளர்: ராஜா மகேந்திரன்
ஆசிரியர்: சத்தியா மகேந்திரன்
முகாமையாளர்: கமல் செல்லையா
ஊடகப் பொறுப்பாளர்: விஜய் செல்லையா
அலுவலக பொறுப்பாளர்: யசோதா குமாரகுலசிங்கம்
பதிப்பு: Canyon Press Inc.

'விளம்பரம் பப்ளிகேஷன்ஸ் இங்' நிறுவனத்தால் வெளியிடப்படும் 'விளம்பரம்' பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களுக்கு எழுத்தாளர்களும். விளம்பரங்களுக்கு விளம்பரதாரர்களுமே பொறுப்பாளர்கள். விளம்பரம் பத்திரிகையில் பிரசுரிக்கப்படும் ஆக்கங்களை முழுமையாகவோ அல்லது பகுதியாகவோ ஆசிரியரின் அனுமதியின்றி மறுபிரசுரம் செய்தலாகாது.

Vlambaram Publications Inc.
GTA SQUARE, 5215 FINCH AVE. E.,
#201, TORONTO, ON M1S 0C2, CANADA
TEL: 416-282-8059/ FAX: 416-286-0344
email:vlambaram@sympatico.ca
web: www.vlambaram.com


Vlambaram Publications Inc. 2020 All Rights Reserved

## 'House...

06ஆம் பக்கத்தொடர்ச்சி

எதிர்காலச் சட்டங்கள் Flipping Property மீதான புதுவிதமான ஆதாய வரிகள் கொண்டு வரப்படலாம்.

உண்மையான நியாயங்கள் தெரிவிக்கப்படும் சந்தர்ப்பங்களில் ஒரு வருடத்திற்குள் விற்பனை செய்தாலும் செலுத்தப்படும் ஆதன வரியில் இலகுத்தன்மை காட்டப்படும். இவ்வாறான நியாயங்கள் நம்பிக்கைக்குரியதாக இருத்தல் வேண்டும். இதுவரை அநேகர் Flipping Housesகளில் ஆதாயம் பெற்றே வருகின்றனர். ரொறொன்ரோ, வன்கூவர் உலகில் வாழ சிறப்பு இடமாக



இருப்பதால் தொடர்ச்சியாக மக்கள் வந்து கொண்டே இருப்பார்கள். இந்த வியாபாரமும் தொடரலாம்.

# குற்றச் செயல்களின் தன்மை குறித்த குழப்பம்..!

**- விகிர்தன் -**

இலங்கையில் சமகாலத்தில் அதிகம் அடிபடுகின்ற செய்தி இரண்டு நபர்கள் பற்றியதாகவே இருக்கின்றது. ஒருவர் கிறிஸ்தவ மதப் போதகர் ஜெரோம் பெர்னாண்டோ அடுத்தவர் நடாஷா எதிரிசூரிய என்ற பெண். இருவரும் புரிந்த குற்றம் என்னவெனில் மதங்களை விமர்சித்தமை.



மதப் போதகர், தான் சார்ந்த மதத்தை உயர்வாகக் காட்டுவதற்காக ஏனைய மதங்களை குறைவாக சித்தரித்து கருத்து வெளியிட்டதாக தெரிவிக்கப்படுகின்றது. நடாஷா எதிரிசூரிய இலங்கையில் ஒரு நகைச்சுவைப் பேச்சாளராகப் பிரபலமானவர். அண்மையில் கொழும்பு பாடசாலை ஒன்றில் நடைபெற்ற நிகழ்ச்சி ஒன்றில் நகைச்சுவையாக பௌத்த மதம் பற்றி ஏதோ கூறிவிட்டார். அதனைக் கேட்டு ரசித்து சிரித்தவர்கள் பௌத்த சிங்களவர்கள்தாம்.

போதகர் தெரிவித்த கருத்து தொடர்பில் சூடுபிடிக்க ஆரம்பித்த சமயத்தில் அவர் வெளிநாடு ஒன்றிற்கு சென்று விட்டார். நடாஷா வெளிநாடு செல்ல முற்பட்ட வேளையில் கட்டுநாயக்க விமான நிலையத்தில் வைத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

போதகர் ஜெரோம் பெர்னாண்டோ நாடு திரும்பும்போது அவரை விமான நிலையத்தில் வைத்தே கைது செய்தவதற்கான ஏற்பாடுகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன. அவர் வெளிநாட்டில் இருந்தபடியே தான் கூறிய கருத்திற்கு பகிரங்க மன்னிப்புக் கோரியுள்ளார். இரண்டு முறை இவ்வாறு அவர் மன்னிப்புக் கோரியுள்ளார். எனினும் அவரை மன்னிக்க முடியாது என்றும் அவர் கைது செய்யப்படுவார் என்றும் பாதுகாப்பு தரப்பு தெரிவிக்கின்றது.

தன்னை கைது செய்வது அடிப்படை மனித உரிமைகளுக்கு எதிரானது என்று தெரிவித்து இலங்கை உச்ச நீதிமன்றில் மனுவொன்றையும் போதகர் தாக்கல் செய்துள்ளார்.

கைது செய்யப்பட்ட நடாஷா விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். அதுமட்டுமன்றி அவர் கலந்துகொண்ட நிகழ்ச்சியில் அவரின் நகைச்சுவை பேச்சைக் கேட்டு கைதட்டி சிரித்து மகிழ்ந்தவர்கள் தொடர்பிலும் விசாரணைகள் முடுக்கிவிடப்பட்டுள்ளன.

இதே காலகட்டத்தில் மிகவும் மோசமான



சம்பவம் ஒன்றும் நடைபெற்றுள்ளது. நாடாளுமன்ற உறுப்பினராக இருக்கும் அலி சப்ரி ரஹீம் வெளிநாட்டிலிருந்து வரும்போது, தங்கம் கடத்தி வந்துள்ளார். ஆறு கோடி ரூபாய் பெறுமதியான மூன்றரை கிலோ கிராம் தங்கம் மற்றும், 96 அலைபேசிகளையும் அவர் சட்ட விரோதமாக கொண்டுவந்துள்ளார். 75 இலட்சம் ரூபா தண்டம் விதிக்கப்பட்ட அவர் அதனை செலுத்தியதால் 24 மணி நேரத்தினுள் விடுவிக்கப்பட்டுள்ளார். அது மட்டுமன்றி அவர் எவ்வித பிரச்சினையுமின்றி மீண்டும் வெளிநாடு பயணமானதாகவும் தெரிவிக்கப்படுகின்றது.

நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீம் இவ்வாறு கடத்தலில் ஈடுபட்டமை மட்டுமல்ல, அதற்கு விமான நிலையத்தில் விசேட பிரமுகர்கள் பயன்படுத்தும் வழியை பயன்படுத்தி இதனைச் செய்துள்ளார். இது ஒரு பாரிய குற்றச் செயல். அவர் அடிக்கடி வெளிநாடு சென்று வருவதாக தெரிவிக்கப்படுகின்றது. அப்போதெல்லாம் இவ்வாறு கடத்தல்கள் தொடர்ந்து நடைபெற்றிருக்கலாம். அது தொடர்பில் விசாரணைகள் நடத்தப்பட வேண்டும்.

அலி சப்ரி ரஹீம் 24 மணிநேரத்தில் விடுவிக்கப்பட்டமை தொடர்பில் தெரிவிக்கப்படும் விமர்சனங்களுக்கு அரசாங்கத் தரப்பில் விளக்கமளிக்கப்பட்டுள்ளது. தங்கம் கடத்தியதாக குற்றம் சாட்டப்பட்ட நாடாளுமன்ற உறுப்பினர் அலி சப்ரி ரஹீமுக்கு, கைப்பற்றப்பட்ட தங்கத்தின் எடைக்கு ஏற்ப, அண்மைக் காலத்தில் விதிக்கப்பட்ட அபராதங்களிலேயே அதிகூடிய அபராதம் விதிக்கப்பட்டுள்ளதாகவும், அவரை விடுவித்ததில் எந்த வித முறைகேடும் நடக்கவில்லை என்றும் நிதி இராஜாங்க அமைச்சர் ரஞ்சித் சியம்பலாபிட்டிய நாடாளுமன்றில் தெரிவித்துள்ளார்.

இதேபோன்ற குற்றத்திற்காக தடுத்து வைக்கப்பட்டுள்ள எவரும் அபராதம் செலுத்தினால் சுங்கச் சட்டத்தின்படி 24



மணி நேரத்திற்குள் விடுவிக்கப்படுவார்கள் என்றும் அவர் கூறினார். இதனை நாட்டிலுள்ள பொதுமக்கள் ஏற்றுக்கொள்வது என்பது கடினமான காரியம்தான்.

இதேவேளை, தான் செய்த குற்றச் செயலை அலி சப்ரி ரஹீம் நியாயப்படுத்துவது வியப்பானதாக இருக்கின்றது. தான் செய்தது குற்றமல்ல எனவும், தன்னுடைய பயணப் பொதியை தனது உதவியாளரே எடுத்துவந்தார் என்றும், ஆனால், ஊடகங்களில் தன் மீதே குற்றஞ்சாட்டப்பட்டது என்றும் கூறியுள்ள அவர், இது தொடர்பில் தான் ஜனாதிபதியின் செயலாளருக்கும், பிரதமருக்கும் அறிவித்ததாகவும் தனக்கு எவரும் உதவவில்லை எனவும் இதனால் தனக்கு அநீதி இழைக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

உண்மையில் இவரது கடத்தல் என்பது நியாயப்படுத்த முடியாத ஒரு குற்றச் செயல். இது தொடர்பில் முழுமையான விசாரணைகள் மேற்கொள்ளப்பட்டு அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும். அவர் நாடாளுமன்ற உறுப்பினர் பதவியிலிருந்து நீக்கப்பட வேண்டும். அவர் சார்ந்த கட்சி அவர் மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்.

ஆனால், அலி சப்ரி ரஹீமை நாடாளுமன்ற உறுப்பினர் பதவியில் இருந்து நீக்கும் அதிகாரம் நாடாளுமன்றத்திற்கு இல்லை என்று சொல்லப்படுகின்றது. அதனால், அலி சப்ரி ரஹீமை சுய விருப்பத்தின் பேரில் அவராகவே பதவி விலகச் செய்யுமாறு கோருவதற்கான தீர்மானமொன்றை கொண்டு வருவது தொடர்பில், நாடாளுமன்ற விடயங்கள் தொடர்பான தெரிவுக்குழு கவனம் செலுத்தியுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

நாடாளுமன்ற விடயங்கள் தொடர்பான தெரிவுக்குழுவில், கட்சித் தலைவர்களால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டுள்ளது. எனினும், இவையெல்லாம் எந்தளவில் நடந்தேறப் போகின்றது என்பது தெரியவில்லை.

ஆனால், போதகர், ஜெரோம், பெர்னாண்டோவும், நகைச்சுவைப் பேச்சாளர் நடாஷா எதிரிசூரியவும் இன்று நாட்டில் மிகப்பெரிய குற்றச் செயலை புரிந்தவர்களாக சித்தரிக்கப்படுகின்றனர் என்பதுதான் ஆச்சரியமானது.

மதங்களை விமர்சிப்பது, மதங்களின் பெயரால் மேற்கொள்ளப்படும் முட்டாள்தனமான காரியங்களை சுட்டிக்காட்டுவது என்பது தவறானதல்ல. ஆனால், மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் திட்டமிட்ட நடவடிக்கைகள் தாம் தவறானது- உள்நோக்கமுள்ளது. மதங்களுக்கு இடையிலான நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் மோசமான கருத்துகளை பௌத்த தேரர்களே அதிகம் தெரிவித்து வந்துள்ளனர்.

'இந்நாட்டில் இனவாத வெறுப்புக் கருத்துகளை இந்து, இஸ்லாம், கத்தோலிக்க மதங்களுக்கு எதிராக தெரிவித்துவரும் பௌத்த பிக்குகள் மீதும் சட்டம், ஒழுங்கு, நீதித் துறை பாய வேண்டும்' என மனோ கணேசன் டுவிற்றரில் குறிப்பிட்டுள்ளதையும் இங்கு சுட்டிக்காட்டலாம்.




Sam Surendran
Mortgage Broker
LICENCE # M16002312
647-922-5704
MORTGAGE ALLIANCE
Office: 1585 Markham Road, Unit 110, Scarborough ON. M1B 2W1

MORTGAGE OFFICE
GOOD SERVICE . GOOD LENDERS
GOOD RATES
Apply for your mortgage loan today
*Hiring Mortgage Agents, Commission Income
www.OKmortgages.ca

## நாமும் நமது இல்லமும் 632

# 'House Flipping'



ராஜா மகேந்திரன், P.Eng.
raja@mahendran.ca
416.315.9397/416.321.6969

அண்மைக்காலமாக 'House Flipping' என்ற சொல் ஆதன வியாபாரத்தில் மிகவும் பிரசித்தியடைந்து வருவதனை கனடியர்கள் அறிவார்கள். பொதுவாக House Flipping என்பது, ஓர் ஆதனத்தைக் கொள்வனவு செய்த பின்பு குறிப்பிட்ட கால இடைவெளியில் இதனை விற்று ஆதாயம் பெறுவதனையே குறிக்கும்.

ஏறும் ஆதனச் சந்தையில் இது இலகுவாக நிகழ்வதனை ரொறொன்ரோ மற்றும் வன்கூவர் பகுதிகளில் காணக் கூடியதாக உள்ளது. பொதுவாக ஆதனத்தை வாங்குபவர்கள் மக்களின் இரசனைக்கு ஏற்ப சில திருத்த வேலைகளை குறைந்த செலவில் செய்து திரும்ப ஆதனச் சந்தையில் விற்று ஆதாயம் பெறுவதனைக் காணக்கூடியதாக உள்ளது. இவ்வாறான செயல் ஆதன முதலீட்டாளர்களிற்கு சிறந்த வருமானத்தைப் பெற்றுக் கொடுப்பதனை அனுபவத்தில் காணக்கூடியதாக உள்ளது.

எனினும், இதில் பலவிதமான சவால்களை முதலீட்டாளர்கள் எதிர்பார்க்க வேண்டி உள்ளதனையும் கனடியர்கள் அறிய




வேண்டும். அத்துடன் அதில் ஏற்படும் ஆதாயத்திற்கு அரசிற்குரிய வருமான வரியும் செலுத்த வேண்டியுள்ளது. இதில் உள்ள சவால்களைக் கவனமாக ஆராயா விட்டால் இந்த வகையான வியாபாரம் நட்டத்தில் முடியும் என்பதும் கவனத்தில் கொள்ள வேண்டிய ஒன்றாகும்.

பொதுவாக Flipping நோக்கத்திற்காகக் கொள்வனவு செய்பவர், சந்தை விலையைவிடக் குறைவாக வாங்க வேண்டும். குறிப்பிட்ட குறைந்த காலத்தில் திருத்த வேலைகளை சிறப்பாக செய்து முடித்து சந்தைப்படுத்தல் வேண்டும். இதனைச் செய்வதற்குப் போதியளவு ஆரம்ப முதலீடு, செலவழிக்கக் கூடிய நேரம் மற்றும் சிறப்பான முன்னேற் பாடுகள் செய்தல் வேண்டும்.

அடமானம், திருத்த வேலைகளிற்கு மேலதிக பணத்திற்காக தகுந்த இடத்தில் பணம் பெறுதல் வேண்டும். பெறப்படும் கடனிற்குக் குறைந்தளவு வட்டி வீதம் செலுத்த வேண்டும். எனினும், எதிர்பாராத சவால்கள் ஏற்படின் அதனை தகுந்த முறையில் கையாளக்கூடிய ஆலோசகர் களுடன் தொடர்பில் இருக்க வேண்டும்.

அண்மையில் Flippingஇனால் ஏற்படும் ஆதன வருமானத்தில் அரசு தனக்கும் ஒரு பகுதியைப் பெறுவதில் மிகவும் கவனமாக உள்ளது.

ஆதனத்தை விற்ற பின்னர் பெறும் ஆதாயம் மூலதன ஆதாயம் (Capital Gain) என அழைக்கப்படும். மேலதிக மாகப் பெறும் ஆதாயத்திற்கு அரச வரி செலுத்த வேண்டும். வாங்கி விற்கும் ஆதனம் ஒரு வருடத்திற்குக் குறைவாக அல்லது ஒரு வருடத்திற்கு அதிகமாக இருந்தால், அதற் கேற்ப வருமானவரி மாறுபடும். இவ்வாறு அடிக்கடி வாங்கி விற்றால் இதனையும் ஒரு வியாபாரமாக அரசு கணிக்கும். அவ்வாறான நிலையில் வியாபார வருமான வரி செலுத்தல் வேண்டும்.



Flipping பிரசித்தி பெற்று வருவதால் அரசு இதற்கு எதிராக புதிய சட்டங்களை இயற்றியுள்ளது. சிலர் இவ்வாறான ஆதனங்களை தமது முதன்மை இருப்பிட மாக (Principal Home) அரசிற்குச் சொல்லி வருகின்றார்கள். முதன்மை இருப்பிடத்திற்குக் கிடைக்கும் எதுவித இலாப வரியும் இதுவரை கனடாவில் செலுத்த தேவை இல்லை. இதனால் முதன்மை இருப்பிடம் என்பது ஒருவர் குறைந்தது ஒரு வருடமாக அங்கு வாழ்ந்து இருக்க வேண்டும் என்று சட்டமாற்றம் செய்துள்ளது.

(தொடர்ச்சி 04ஆம் பக்கம்...)



# ரொறொன்ரோ...

01ஆம் பக்கத்தொடர்ச்சி

அவர்களுக்கு ஊடகங்கள் முன்னுரிமை கொடுப்பதாக ஊடகவியலாளர் தெரிவிக்கின்றனர்.


Olivia Chow

நகரசபைத் தேர்தலில் வேட்பாளராகப் பதிவு செய்யப்பட்ட 102 பேர்களில் புதிய ஜனநாயக கட்சியின் சார்பில் ரொறொன்ரோவில் உள்ள Trinity - Spadina தொகுதியில் இருந்து நாடாளுமன்ற உறுப்பினராக 2006ஆம் ஆண்டில் இருந்து 2014ஆம் ஆண்டுவரை பதவி வகித்த Olivia Chow முன்னணியில் திகழ்வதாக கருத்துக்கணிப்புகளை நடத்தும் எல்லாம் ஊடகங்களுமே ஏக மனதாகக் கூறுகின்றன. இவர் ரொறொன்ரோ நகர சபை உறுப்பினராக 1998ஆம் ஆண்டில் இருந்து 2005ஆம் ஆண்டுவரை இருந்தவர்.

இவர் 2014ஆம் ஆண்டில் தனது நாடாளுமன்றப் பதவியில் இருந்து விலகி ரொறொன்ரோ நகரசபைத் தேர்தலில் நகர முதல்வருக்காகப் போட்டியிட்டு 226,879 வாக்குகளைப் பெற்றிருந்தார். அப்போது அவர் 23% வாக்குகளைப் பெற்று மூன்றாம் இடத்திற்கு வந்திருந்தார்.

இவரது கொள்கையில் முதலாவதாக இருப்பது வாடகைக் குடியிருப்பாளருக்கு ஆதவராக இருப்பது என்ற குறிக்கோள் ஆகும். வாடகைக் குடியிருப்புகளைப் புனரமைப்புச் செய்வதற்காக அங்கு குடியிருப்பவரை வெளியேற்றுவதை உடனடியாக நிறுத்துதல் (Stop Renovictions). பொதுமக்களுக்குக் கட்டுபடியான வீடுகளை (Affordable Housing) அமைக்க வருடாந்தம் $100 மில்லியன் நிதி ஒதுக்கப்படுதல். வாடகைக் குடியிருப்பாளர்களை வாடகை வீட்டில் இருந்து வெறியேற்றாமல் தடுக்கவும் வீடற்றோருக்கு வதிவிடங்கள் வழங்கவும் $12 மில்லியன் நிதி முதலிடப்படுதல். ரொறொன்ரோவில் வீட்டில் வாடகைக்கு இருப்போர், வாடகைக்கு வீடு வழங்குவோர், சட்டத்தரணிகள், நகரசபை உறுப்பினர் மற்றும் நகர முதல்வரைக் கொண்ட குழு ஒன்றை அமைத்தல். அக்குழு வாடகையாளர்களுக்கான நடவடிக்கைக்குழு (Renters Action Committee) என அழைக்கப்படும். அக்குழு வாடகைக்குக் குடியிருப்போருக்கான நியாயத்தை வழங்கும். வாடகைக்கு இருப்போரின் உரிமையைப் பாதுகாக்கும். வாடகைக்குக் குடியிருப்பவரை முறைகேடாக வெளியேற்றுவதைத் தடுக்கும். அத்துடன் அக்குழு பொதுமக்களுக்குக் கட்டுபடியான வீடுகள் அமைக்கும் திட்டங்களுக்கு ஆலோசனையும் வழங்கும்.


இத்திட்டங்களுக்கான நிதி ரொறொன்ரோ நகரத்தில் வீடுகளைப் பாவிக்காமலும் வாடகைக்கு விடாமலும் வைத்திருப்போருக்கு மேலதிக வரி விதிப்பதன் மூலம் அறவிடப்படும் பணத்தில் இருந்து வழங்கப்படும். இவ்வாறு வீடுகளைப் பாவிக்காமல் ஆறு மாதத்திற்கு மேல் வைத்திருப்போருக்கு விதிக்கப்படும் வரி 2%ஆல் அதிகரிக்கப்பட்டு 3%ஆக உயர்த்தப்படும். இவ்வாறு அதிக வரி விதிப்பதால் பாவிக்காமல் வீடுகளை வைத்திருப்போர் வாடகைக்குத் தமது வீடுகளை கொடுக்கத் தூண்டப்படுவர். வீடுகளைப் பாவிக்காமல் இருப்போருக்கு அறவிடப்படும் வரியால் வருடாந்தம் $12 மில்லியன் பெறப்படும் என எதிர்பார்க்கப்படுகிறது.

Liaison Strategies கருத்துக்கணிப்பு நிறுவனத்தின் தகவல்களின்படி நகர முதல்வருக்கான வேட்பாளரின் நிலை பின்வருமாறு:

1. Olivia Chow - 29%
2. Mark Saunders - 17%
3. Mitzie Hunter - 15%
4. Josh Matlow - 11%
5. Brad Bradford - 10%
6. Ana Bailao - 8%

இக்கருத்துக்கணிப்பு மே 18ஆம் திகதி நடத்தப்பட்டது. இக்கருத்துக் கணிப்பில் 28%ஆனோர் தாம் இதுவரை யாருக்கு வாக்களிப்பது என்று தீர்மானிக்கவில்லை எனத் தெரிவித்துள்ளனர்.

Mark Saunders 2015ஆம் ஆண்டில்


Mark Saunders

இருந்து 2020ஆம் ஆண்டுவரை ரொறொன்ரோவின் நகர் காவலர் தலைவராகப் (Chief of Toronto Police Service) பதவி வகித்தவர். 2022ஆம் ஆண்டு நடைபெற்ற ஒன்ராறியோ மாகாணத் தேர்தலில் ஒன்ராறியோ பழமை வாதக்கட்சியின் சார்பில் டொன் வலி மேற்குத் தொகுதியில் தேர்தலுக்கு நின்றவர். இவரது கொள்கையில் முதலாவதாக ரொறொன்ரோ போக்குவரத்துச் சபைக்கு (TTC) மேலதிக சிறப்புக்காவலர் சேவையை வழங்குவதுடன் அவர்களுக்கு உடலில் அணியும் நிகழ்வுகளைப் பதியும் கருவி (Body Cameras) வழங்குதல் இருக்கிறது.






Mitzie Hunter 2013ஆம் ஆண்டில்


Mitzie Hunter
Thanks: CBC

இருந்து தற்போதுவரை ஒன்ராறியோ லிபரல் கட்சியின் சட்டசபை உறுப்பினராக இருக்கிறார். இவர் ஒன்ராறியோவை லிபரல் கட்சி ஆட்சி செய்யும்போது 2016ஆம் ஆண்டில் இருந்து 2018ஆம் ஆண்டுவரை கல்வி அமைச்சராக இருந்தவர். இவரது கொள்கையில் முக்கியமாக காலநிலை மாற்றத்தைத் தடுப்பதற்கு ஆலோசனை வழங்க ஓர் அலுவலகத்தை உருவாக்குவதல் மற்றும் ரொறொன்ரோ நகர முதல்வருக்கான சிறப்பு அதிகாரத்தைப் (Veto) பாவிக்காமல் தவிர்த்தல் ஆகியன இருக்கின்றன.

Josh Matlow ரொறொன்ரோ நகரசபை


Josh Matlow

உறுப்பினராக Toronto-St.Paul's வட்டாரத்தை 2010ஆம் ஆண்டில் இருந்து தற்போதுவரை பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறார். இவரது கொள்கையில் முதலாவதாக ரொறொன்ரோவில் சொத்து வரியை (Property Taxes) 2%ஆல் அதிகரித்து அதில் வரும் பணத்தில் இருந்து அரசாங்க வீட்டு வசதிகளை உருவாக்குதல் இருக்கிறது.

Brad Bradford ரொறொன்ரோ நகரசபை


Brad Bradford

உறுப்பினராக Beaches - East York வட்டாரத்தை 2018ஆம் ஆண்டில் இருந்து தற்போதுவரை பிரதிநிதித்துவப்படுத்தி வருகிறார். இவரது கொள்கையில் முக்கியமாக பொழுதுபோக்கிற்காகப் பாவிக்கப்படும் போதை மருந்துகளை வைத்திருப்பதை குற்றமற்றதாக மாற்றுதல் மற்றும் நிலக்கீழ் தொடருந்து நிலையங்களில் பயணிகள் மேடைகளுக்கு கதவுகளை அமைத்தலும் இருக்கின்றன.

Ana Bailao ரொறொன்ரோ நகரசபை உறுப்பினராக 2010ஆம் ஆண்டில் இருந்து 2022ஆம் ஆண்டுவரை Devenport வட்டாரத்தை பிரதிநிதித்துவப்படுத்தியவர். அத்துடன் 2017ஆம் ஆண்டில் இருந்து 2022ஆம் ஆண்டுவரை துணை நகர முதல்வராகவும் இருந்தவர். இவரது கொள்கையில் முக்கியமாக பொழுது போக்கிற்காகப் பாவிக்கப்படும் போதை மருந்துகளை வைத்திருப்பதை குற்றமற்றதாக மாற்றுதல் மற்றும் போக்குவரத்துச் சேவைகளில் செய்த நிதிக்குறைப்பை மீண்டும் வழங்குதல் இருக்கின்றன.

CTV ஊடகத்தின் தகவலின்படி இம்முறை நடைபெறும் ரொறொன்ரோ நகரசபை நகர முதல்வருக்கான தேர்தலில் 2022ஆம் ஆண்டில் நடைபெற்ற நகரசபைத் தேர்தலில் வாக்களித்த 30%ஆன மக்கள் வாக்களித்தால் அதில் 25%ஆன வாக்குகளான அதாவது 140,000 வாக்குகளைப் பெற்றே ஒருவர் நகர முதல்வராக வர வாய்ப்பு உள்ளது. இதன்மூலம் ரொறொன்ரோ நகரில் வாக்களிக்கத் தகுதியுள்ள 2 மில்லியன் மக்களில் 7%ஆன மக்களின் ஆதரவுடனேயே ஒருவர் இம்முறை ரொறொன்ரோ நகர முதல்வராக வர சாத்தியக்கூறுகள் உள்ளன எனத் தெரிவித்துள்ளது.

# நானிலம் போற்றும் நட்பு - 22



- அகணி -
authorakani@gmail.com

"நட்பிற் குறுப்புக் கெழுதகைமை மற்றதற்கு
உப்பாதல் சான்றோர் கடன்." (அதிகாரம் பழமை, குறள் 802) என்ற குறளிற்கு "நட்பிற்கு உறுப்பாவது நண்பனுடைய உரிமைச் செயலாகும், அந்த உரிமைச் செயலுக்கு உடன்பட்டவராதல் சான்றோரின் கடமையாகும்." என்று உரையாசிரியர் மு. வரதராசனார் அவர்கள் உரை தந்துள்ளார்.

"நட்பிற்கு இலக்கணம் உரிமை பாராட்டுவதே: அந்த உரிமையை மதிப்பது சான்றோர் கடமையாகும்." என்று உரையாசிரியர் அருள்திரு திருக்குறள் மாமுனிவர் முனைவர் கு. மோகனராசு அவர்கள் உரை தந்துள்ளார்.

"சினேகத்துக்கு அங்கம், உரிமையுடன் செயல் செய்தலும் அதை ஒத்துக் கொள்ளுவதும் ஆகும்" என்று உரையாசிரியர் சாமி சிதம்பரனார் அவர்கள் உரை தந்துள்ளார்." என்ற அறிவுரையை இந்தக் குறள் வழங்குகிறது.

உரிமை பாராட்டுவது என்ற நண்பர்களுக்குரிய பண்பை மதிப்பது சான்றோர் கடமை என இந்தக் குறள் கூறுகிறது.

சங்கம் மருவிய காலத் தமிழ் நூல் தொகுப்பான பதினெண் கீழ்க்கணக்கு நூல்களுள் ஒன்று பழமொழி நானூறு. அதன் சிறப்புப் பாயிரத்தையும், கடவுள் வணக்கத்தையும் சேர்த்து நாலடியால் அமைந்த நானூற்றொரு (401) பாடல்களைக் கொண்டது. இது முன்றுறையர் அல்லது முன்றுறை அரையனார் என்னும் சமண முனிவரால் இயற்றப்பட்டது. இதன் ஒவ்வொரு பாட்டிலும் ஒரு பழமொழி சார்ந்த நீதி கூறப்படுவதால் பழமொழி நானூறு என்ற பெயர் பெற்றுள்ளது. இதன் காலம் கி. பி. ஐந்தாம் நூற்றாண்டு ஆகும். இந்நூலில் 34 தலைப்புகளின் கீழ் பாடல்கள் அமைந்துள்ளன. இந்த நூலில் உள்ள சில பாடல்கள் நட்பு பற்றிக் கூறும் கருத்துக்களை உரையாசிரியர் புலியூர்க் கேசிகன் அவர்களின் உரையினை மூலமாகக் கொண்டு ஆராய்வோம்.

பழமொழி நானூறு - பாடல் 43
பகைவரின் துணைவரை நட்பாக்கிக் கொள்க
"யானும்மற்(று) இவ்விருந்த எம்முனும் ஆயக்கால்
வீரம் செயக்கிடந்த(து) இல்லென்று - கூடப்
படைமாறு கொள்ளப் பகைதூண்டல் அஃதே
"இடைநாயிற்(று) என்பிடு மாறு".

பகைவர் இருவராகிய இடத்து, அவருள் ஒருவரை உறவாடிப் பிரித்துத் தம்மவராக்கிக் கொள்ளல் சிறப்புடையது. "இடைநாயிற்கு" - கிடை நாயிற்கு என்றும் பாடம். "இடை நாயிற்கு என்பு இடுமாறு" என்பது பழமொழி. என்பு பெற்ற நாய் கள்ளற்குச் சாதகமாவது போலப் பகைவர்க்குத் துணையாக வந்தாரும் மாறி விடுவர் என்பதாம்.

பழமொழி நானூறு - பாடல் 47
போலி நண்பர்கள் கேடு செய்வார்கள்
"பெரியநட் டார்க்கும் பகைவர்க்கும் சென்று
திரிவின்றித் தீர்ந்தார்போல் சொல்லி அவருள்
ஒருவரோ டொன்றி ஒருப்படா தாரே
இருதலைக் கொள்ளியென் பார்".

தம்மிடத்திலே மிகுதியாக நட்புப் பூண்டவர்களுக்கும், அவர்களுடைய பகைவர்களுக்கும் இடையே சென்று, இருவரிடத்தும் மன வேறுபாடு இல்லாமல் மிகவும் நட்புடையவர்கள் போலவே பேசிப் பழகி, அவர்களுள் ஒருவருடன் மனம் ஒருமைப்பட்டு விளங்காதவர், மிகவும் கெட்டவர்கள். அவர்களே, இருதலைக் கொள்ளி என்று சொல்லப்படுபவராவர்.



சந்திரமௌலீஸ்வர சிவாலயம்
தினமும் ஆறுகால பூஜைகள் நடைபெறும்
ஆலயம் திறந்திருக்கும் நேரம்
வெள்ளி, சனி, ஞாயிறு மற்றும் விசேட தினங்களில்: காலை 7am - மாலை 9pm
திங்கள் - வியாழன் - காலை 7am - 2pm மாலை 5pm - 9pm
விசேட தினங்களில் பூஜை நேரங்களில் மாற்றங்கள் ஏற்படலாம். ஆலயத்தை அழைத்து பூஜை நேரங்களை நிச்சயப்படுத்திக் கொள்ளுங்கள்
Tel: 416.754.7338 / 416.724.7480
3011 Markham Road, Unit 62 & 63 (North of McNicoll Ave.), Scarborough


பழமொழி நானூறு - பாடல் 77
இரண்டறக் கலப்பதே நட்பு
"ஒட்டிய காதல் "உமையாள் ஒரு பாலாக்
கட்டங்கம் வெல்கொடி கொண்டானும் கொண்டானே"
விட்டாங்கு அகலா முழுமெய்யும் கொள்பவே
நட்டாரை ஒட்டி யுழி."



உளம் பொருந்திய காதலுடைய உமையவளைத் தன்னிலே ஒரு கூறாக அமையுமாறு, தண்டினையும் வெல்லுகின்ற ஏற்றுக் கொடையைத் தனக்கு உரியதாகக் கொண்டவனும் கொண்டிருக்கிறான். தம்மை நட்புச் செய்தவர்களைச் சேர்ந்த பொழுதிலே, அவரைவிட்டு அவ்விடத்தே கொஞ்சமேனும் அகலாமல், முழு உடம்பும் பொருந்தக் கலந்து விடுபவர்களே சிறந்த நண்பர்கள் ஆவர்.

சிறந்த நண்பர்கள், நண்பரே தாம் என்று கருதும் கலந்த ஈடுபாடு உடையவர்கள் என்பது கருத்து. "உமையாள் ஒரு பாலாக் கட்டங்கம் வெல் கொடி கொண்டானும் கொண்டான்" என்பது பழமொழி. தண்டு என்றது பகைவரின் பெரும்படையை.

பழமொழி நானூறு - பாடல் 82
நண்பரைப் பழித்தல் கூடாது
"கொழித்துக் கொளப்பட்ட நண்பின் அவரைப்
பழித்துப் பலர்நடுவண் சொல்லாடார் - என்கொல்?
விழித்தலரும் நெய்தல் துறைவா! "உரையார்
இழித்தக்க காணிற் கனா"

கண்கள் விழித்திருப்பன போன்று மலர்கின்ற நெய்தற் பூக்களையுடைய கடற்றுறைகட்கு உரியவனே! ஆராய்ந்து தெளிந்து கொள்ளப்பட்ட நண்பர்களைப் பழித்து, அறிவுடையோர் பலர் நடுவிலே சொல்லாட மாட்டார்கள் என்ன காரணம் என்றால், தமக்கு இழிவைத் தருவன பற்றிக் கனவு கண்டவர், அதனை யாருக்கும் சொல்ல மாட்டார்கள் என்பதனால்.

நண்பரைப் பழி கூறித் தூற்றினால் அந்த இழிவு நம்மையும் வந்தடையும் என்பது கருத்து. "உரையார் இழித்தக்க காணிற் கனா" என்பது பழமொழி.

பழமொழி நானூறு - பாடல் 103
கெடுக்க முயன்றவன் நண்பனானால்...?
"நலிந்தொருவர் நாளும் அடுபாக்குப் புக்கால்
மெலிந்தொருவர் வீழாமைகண்டு - மலிந்தடைதல்
பூப்பிழைத்து வண்டு புடையாடும் கண்ணினாய்!
"ஏப்பிழைத்துக் காக்கொள்ளு மாறு"

நீலோற்பல மலர்கள் என்று கருதிய வண்டினம், உண்மையான பூக்களைக் கைவிட்டுப் பக்கத்திலே மொய்த்துக் கொண்டிருக்கின்ற கண்களை உடையவளே! ஒருவன் ஒருவனை நலிந்து கெடுப்பதற்கு நாள்தோறும் சென்றான் அதனால், அந்த ஒருவன் தளர்ச்சியுற்று வீழ்ந்து விடாமல் இருப்பதைப் பார்த்தான் பின்பு, அவனோடு மிகவும் நட்புடையவனாகச் சென்று சேர்ந்தான் இப்படிச் சேர்வது அம்பினால் எய்து ஒருவனைக் கொல்ல முயன்றவன், எய்யப்பட்டவன் அதற்குத் தப்பிவிட, அவனைப் பின்னர் தனக்குக் காவலாகக் கொள்வது போன்றதாகும்.

ஒருவனைக் கெடுக்க முயன்று முடியாமல் போக அவனுடன் நண்பராக முயல்பவர், என்றும் அந்தக் கெட்ட எண்ணத்துடனேயே இருப்பார்கள். அவர்கள் தொடர்பு அறவே கூடாதென்பது கருத்து. "ஏப் பிழைத்துக் காக் கொள்ளுமாறு" என்பது பழமொழி. தன்னால் வெல்ல முடியாத ஒருவனைத் தனக்குக் காவலாகக் கொள்வது இயல்பு என்பதும் ஆகும்.

பழமொழி நானூறு - பாடல் 110
நண்பர் தீங்கினைப் பொறுத்தல்
"தம்தீமை இல்லாதார் நட்டவர் தீமையும்
எம்தீமை என்றே உணர்பதாம் - அந்தண்
பொருதிரை வந்துலாம் பொங்குநீர்ச் சேர்ப்ப!
"ஒருவர் பொறைஇருவர் நட்பு"

கரையோடு பொருதலான அலைகள் வந்து உலவுகின்ற பொங்கும் நீர் வளத்தினையுடைய சேர்ப்பனே! ஒருவர் பொறுக்கும் பொறுமையானது ஒருவரின் நட்புக்கும் உதவியாகும். நட்புச் செய்தவர்களுக்குத் தம்மால் செய்யப்பட்ட தொரு தீமை எதுவும் இல்லாதவர்கள், தமக்கு நண்பர்கள் செய்யும் தீமையையும், "எம் தீவினைப் பயனால் வந்துற்றதே இது" என்று நினைத்து அதனைப் பாராட்டாது பொறுத்துக் கொள்ளவே செய்வார்கள்.

நட்பில் பிழை பொறுத்தல் இல்லாதபோது அது நிலையாது (தொடர்ச்சி 17ஆம் பக்கம்...)

# சாதி என்ற சொல்லாடலே சோழர் காலத்தில்தான் வருகிறது!

## நேர்காணல் - தொல்லியல் ஆய்வாளர் சொ. சாந்தலிங்கம்

### நேர்கண்டவர்: தினகரன் ஜெய்

சென்ற இதழ் தொடர்ச்சி;

**சோழர் ஆட்சியில் அடிமை முறை இருந்ததா...?**

எல்லா ஆட்சிக் காலத்திலும் அடிமை முறை இருந்துள்ளது. அக்கால அடிமை முறை என்றால் தங்களைத் தாங்களே அடிமையாகக் கொடுத்துக்கொள்வது அல்லது வேறு சிலருக்கு அடிமையாக விற்பனை செய்வது. தமிழ்நாட்டு பகுதியில் கடந்த 18ஆம் நூற்றாண்டுவரை இந்த அடிமை முறை இருந்தது என்பதற்கு கல்வெட்டு சான்றுகளும் ஓலைச்சுவடி சான்றுகளும் இருக்கின்றன.

**சேரர், சோழர், பாண்டியர் என்னும் மூவேந்தர் ஆட்சிக் காலத்தில் இருந்துதான் தமிழ்நாட்டில் தீண்டாமை புழக்கத்தில் வந்ததாக இந்திய வரலாற்று ஆசிரியர் ரொமிலா தாப்பர் குறிப்பிடுகிறார். இதில், குறிப்பாக சோழர்களின் நிலை என்ன...?**

இங்கு சாதி என்ற சொல்லாடலே சோழர் காலத்தில்தான் வருகிறது. குறிப்பாக ராஜ ராஜ சோழன் கல்வெட்டில்தான் பறைச் சுடுகாடு, பள்ளச் சுடுகாடு, வேளாண் சுடுகாடு என்று வெவ்வேறு சமூகத்தைச் சேர்ந்தவர்களின் சுடுகாடுகள் இருந்திருக்கின்றன என்று அறிகிறோம். 'தீண்டாதார்' என்ற வார்த்தை பாண்டிய நாட்டை பொறுத்தவரையில் 13ஆம் நூற்றாண்டு கல்வெட்டில் அதாவது உத்தரகோசமங்கை கல்வெட்டில்தான் வருகிறது. தீண்டாதார் என்றுதான் வருகிறதே தவிர என்ன சாதி என்ற விபரம் அதில் இல்லை. ஆனாலும் கூட புறஞ்சேரி என்ற வார்த்தை சிலப்பதிகார காலத்தில் வருகிறது. மதுரையிலே முக்கியமான நகரம் மைய நகரம் என்று ஒன்று இருந்தது. அதைத் தாண்டி புறஞ்சேரி ஒன்று இருந்தது. அந்தப் புறஞ்சேரியில் வாழ்ந்தவர்கள் யார் என்று நாம் சரியாகச் சொல்ல முடியாது. இடைக்குல மடந்தை என்று சொல்லக் கூடிய மாதுரியிடம் கண்ணகியை அடைக்கலமாக வைத்தார்களே அவர்களே கூடப் புறஞ்சேரியில் வாழ்ந்தார்கள் என்று பார்க்கிறோம். ஆக தீண்டாமை, தீண்டாதார் என்ற சொற்கள் 10ஆம் நூற்றாண்டிற்குப் பிறகு வந்த சொல்லாடல்கள்தான்.

**நிலங்களைப் பறிப்பது, விபச்சாரம், பெண்களை வலுக்கட்டாயமாக தூக்கிச் சென்று தேவரடியாராக மாற்றுவது என்றெல்லாம் இருந்ததாக பேசப்படுகிறதே. இது உண்மையா...?**

வலுக்கட்டாயமாக நிலங்களைப் பறித்தார்கள் என்று கூறுவது ஆதாரமற்ற செய்தி. நிலங்களை வெவ்வேறு பணிகளுக்காக மாற்றி கொடுத்திருக்கின்றனர். பிராமணர்களுக்குக் கொடுத்தது போல வேளாண்மை நிலங்களை சிலருக்குப் பணிகளுக்காக கொடுத்து இருக்கின்றர். குறிப்பாக தேவரடியார்களுக்கும் கொடுத்து இருக்கிறார்கள். தச்சர்களுக்கு கூலியாக நிலங்களை கொடுத்திருக்கின்றனர். வேலை வாங்கிக் கொண்டு நிலங்களைக் காணியாக கொடுக்கும் வழக்கமும் இருந்துள்ளது.

பெண்களுக்கு, அதாவது தேவரடியார்களுக்கு அடையாளம் இடும் முறை இருந்தது. அதாவது, வைணவ கோவிலைச் சார்ந்த தேவரடியார் என்றால் சக்கரத்தை அவரது உடலில் அடையாளமாக இடுவதும், சைவ கோவிலை சேர்ந்த தேவரடியார் என்றால் திரிசூலத்தை அடையாளமாக சூடு இடுவதும் வழக்கமாக இருந்திருக்கின்றன. இதன்மூலம், ஒரு பெண் கோவில் பணியை விட்டு விலகி வேறு ஊருக்கு சென்று இந்த முத்திரையின் மூலமாக தேவரடியாள் என்று தன்னை அடையாளப்படுத்தி பணிக்கு சேருகிற வழக்கம் இருந்துள்ளது. இந்த முத்திரையைக் காட்டி வேலை



பெற்ற ஒரு செய்தியும் கூட கல்வெட்டிலே இருக்கிறது. இன்று இதை நாம் பார்க்கின்ற கண்ணோட்டத்தில்தான் இதன் பொருள் இருக்கிறது. அந்த காலத்து சமுதாயம் அவ்வாறு இருந்தது என்றுதான் நாம் பார்க்க வேண்டுமே தவிர, இன்றைய 21ஆம் நூற்றாண்டு கண்ணோட்டத்தில் அதைக் கடுமையாக விமர்சனம் செய்வது நம்மை நாமே ஏமாற்றிக்கொள்வது போலாகும். இது நம்மை நாமே இழிவுபடுத்திக் கொள்வதாகும்.

**தேவரடியார்கள் என்றால் என்ன?**

தேவரடியார்கள் என்றால் தேவர்களுக்கு தொண்டு செய்வது என்று பொருள். அதில் ஆண்களும் உண்டு, பெண்களும் உண்டு. கோவில்களில் பணிகள் செய்வோர் தேவரடியார்கள் என்று அழைக்கப்பட்டனர். அவர்களுக்கு ஊதியம் உண்டு. பட்டச்சோறு அதாவது சட்டிச்சோறு கொடுப்பார்கள். நிலங்களைக் கொடுப்பர். வீடுகளும் கொடுத்து இருக்கிறார்கள்.

தேவர்களுக்குத் தொண்டு செய்பவர்கள் தேவரடியார்கள் என்பது பின்னால் கொஞ்சம் கொஞ்சமாக, அதாவது ஆயிரம் ஆண்டுகளுக்குப் பிறகு தேவதாசி முறை என்றாகிவிட்டது. ஆனால், ஆரம்பத்தில் தூய்மையான சொல்லாகவும் தூய்மையான கோவில் தொண்டூழியர்களாகவும்தான் அவர்கள் இருந்தார்கள்.

**நிலங்களைப் பறித்தார்கள் என்று கூறுவது ஆதாரமற்ற செய்தி என்று நீங்கள் கூறுகிறீர்கள். ஆனால், திரைப்பட இயக்குநர் பா. ரஞ்சித் வலுக்கட்டாயமாக தலித்துகள் நிலங்கள் பிடுங்கப்பட்டதாக கூறுகிறாரே?**

நிலங்கள் பறிக்கப்பட்டதற்கு ஆதாரம் எதுவும் இதுவரை கிடைக்கவில்லை. சில நிலங்களை பிராமணர்களுக்கு கொடுத்து இருக்கிறார்கள். ஏற்கனவே உரிமைபட்ட, ஒருவரின் நிலத்தை எடுத்து வேறு ஒருவரிடம் கொடுத்திருப்பதையும் அறிய முடிகிறது. உதாரணத்திற்கு ஒன்று சொல்கிறேன். இன்று தஞ்சாவூரில் பூண்டி வாண்டையார் கல்லூரி இருக்கின்ற பகுதியில் 1008 ஆந்திர பிராமணர்களுக்கு லோகமா தேவி சதுர்வேதி மங்கலம் என்ற பெயரில் ஒவ்வொருவருக்கும் சுமார் எட்டு ஏக்கர் வீதம் 1008 பேருக்கு கொடுத்திருக்கிறார்கள். இது மாதிரி பல சதுர்வேதி மங்கலங்கள் தமிழ்நாட்டில் இருக்கின்றன. இவை யாவும் பிராமணர்களுக்காக கொடுக்கப்பட்ட பிரம்மதேயங்கள், சதுர்வேதி மங்கலங்கள். இவற்றைக் கணக்கிட்டால் குறைந்தபட்சமாக தமிழ்நாட்டில் 600 இடங்களாவது தேறும். தமிழ்நாடு முழுவதும் இவை போன்று பிராமணர்களுக்கு கொடுக்கப்பட்ட நிலப்பகுதிகள் உண்டு. ஒருவர் விவசாயம் செய்து கொண்டிருந்த நிலம் இன்னொருவருக்கு மாற்றி கொடுக்கப்பட்டிருக்கிறதே தவிர பறிமுதல் செய்ததில்லை.

அவ்வாறு மாற்றி கொடுக்கின்ற போது குடி நீக்கி கொடுப்பது, குடி நீங்கா கொடுப்பது, தேவதானம் என்றெல்லாம் சொல்வார்கள். குடி நீங்கி உழுபவர்கள் அதாவது நிலமற்றவர்கள், உடல் உழைப்பாளர்கள் இருக்கிறார்கள் அல்லவா அவர்களையும் சேர்த்தே தேவதானமாக கொடுப்பதாகும். குடி நீங்கா தேவதானம் என்று சொன்னால் நீ உனக்கு இஷ்டப்பட்டவர்களை வைத்துக் கொண்டு வேலை செய் என்பதாகும்.

அந்தவகையில் ரஞ்சித் சொல்வதில் ஒரு பகுதி மட்டுமே உண்மை. ஆனால் அவர் சொல்வதுபோல் பள்ளர், பறையர் மக்களின் நிலங்களை பறித்துக் கொடுத்ததாக பொருள் கொள்ள முடியாது. இதுபோன்ற பிரம்மதேயங்கள் ராஜராஜ சோழன் மட்டும் செய்யவில்லை பல்லவர் காலத்திலேயே பிரம்மதேயங்கள் வந்துவிட்டன. இன்னும் சொல்லப்போனால் சங்க காலத்திலேயே பிரம்மதேயங்கள் என்ற சொல் வந்துவிட்டன.

பாண்டிய நாட்டு பகுதியிலே வேள்விக்குடி, தளவாய்புரம், இளையான்புத்தூர் ஆகிய மூன்று செப்பேடுகளும் இதைத்தான் சொல்கின்றன. ஏற்கனவே நிலங்களை யார் வைத்திருந்தார்களோ அவர்களிடத்தில் இருந்து பறித்து வேறு பிராமணர்களுக்கு கொடுத்தபோது அவர்கள் கொந்தளித்துக் கொண்டிருந்தார்கள். வாய்ப்பு வரும்போது கைப்பற்ற முயற்சி செய்கிறார்கள் அதைத்தான் வேள்விக்குடிச் செப்பேட்டில் பார்க்கிறோம். எனவே, இது ராஜராஜ சோழன் மீது மட்டும் சுமத்தக்கூடிய குற்றச்சாட்டு அல்ல, தமிழ்நாட்டில் மூவேந்தர்கள் மீதும் இந்த குற்றச்சாட்டுக்கு இடம் உண்டு.

(தொடர்ச்சி 16ஆம் பக்கம்...)




A METROPIA
MASTER-PLANNED
COMMUNITY
UNLIMITED LIVING.
UNIONCITY in
Downtown Markham
• FREE ASSIGNMENT FOR A LIMITED TIME ONLY
• FREE RIGHT TO LEASE
• CAPPED DEVELOPMENT CHARGES
• 15% DEPOSIT ONLY BEFORE CLOSING
UnionCity is conveniently situated just steps away from Unionville GO Station, York University Markham Campus, and Markham PAN AM Centre.


LAWRENCE HILL
Luxury Urban Towns
$5000 Travel Voucher!!
1 Year Free Maintenance
Free EV Parking Upgrade*
Right to Lease
Free Assignment
Capped Development Charges
Private outdoor spaces (balconies and rooftop terraces)
10%
Deposit Only *
CONTACT OUR SALES TEAM
(416) 569-4948 | (647) 296-0596




**நீண்ட தூர நெடுஞ்சாலை AZ டிரைவர் தேவை !!**

அணிகள் மட்டும்**
பாதைகள் NB-ON-US-ON*
பாதைகள் US மத்திய மேற்கு & கிழக்கு கடற்பரப்பு
(NC, SC, GA, FL, TX, AR, MO, ID, KY, VA, PA, NJ, WI, IL, NE, MN)

- ✓ $2500 கையொப்பம் போனஸ்*
- ✓ $500 பரிந்துரை போனஸ்*
- ✓ அனுபவத்தைப் பொறுத்து ஒரு மைலுக்கு $0.70 வரை சம்பாதிக்கலாம்.
- ✓ 6-8 நாட்கள் வெளியே தங்க விரும்பும் விண்ணப்பதாரர்களுக்கு முன்னுரிமை வழங்கப்படும்.
- ✓ குறைந்தபட்ச வாராந்திர ஊதியம் $2200 முதல் $2500 வரை சம்பாதிக்கலாம்.
- ✓ தானியங்கி டிரக் புதிய மாடல்கள்; Freighliner & Volvo
- ✓ பிரத்யேக பாதைகள்.
- ✓ உங்கள் அரை மாத வருமானத்தை நாங்கள் நேரடியாக உங்கள் வங்கியில் டெபாசிட் செய்கிறோம்.

**குறைந்தபட்ச தேவைகள்:**

- ✓ AZ உரிமம் தேவை
- ✓ 6 மாதங்கள் சரிபார்க்கக்கூடிய அனுபவம்
- ✓ ஓட்டுநர் சுருக்கம்
- ✓ அமெரிக்கா விசா
- ✓ மருந்து சோதனை

**வேலை வகைகள்:** முழுநேரம், நிரந்தரம்

**சம்பளம்:** வாரத்திற்கு $2,200.00-$2,500.00 வரை சம்பாதிக்கலாம்.

**பலன்கள்:**

- ✓ பல மொழி Dispatch ஆதரவு கிடைக்கிறது: தமிழ், ஆங்கிலம், இந்தி, பஞ்சாபி.
- ✓ மருத்துவ காப்பீட்டுத் திட்டங்கள்.
- ✓ சாதாரண உடை.
- ✓ ஆன்-சைட் பார்க்கிங்.
- ✓ கூடுதல் ஊதிய வகைகள்.
- ✓ பாதுகாப்பு போனஸ் ஊதியம்.

**முகவரி:** 39 Manstor Rd, Etobicoke, ON M9C 1B1

நீங்கள் அழைக்கலாம்; Jay-647-222-6969 (அ) Shivek 902-316-2392
(அ) Samuel (Sam) 902-932-7076 EXT#101

**Email:** safety@businessporters.com

**AZ HIGHWAY DRIVER WANTED !!**

TEAMS ONLY**
Lanes NB-ON-US-ON*
Lanes US Midwest & Eastern Seaboard
(NC, SC, GA, FL, TX, AR, MO, ID, KY, VA, PA, NJ, WI, IL, NE, MN)

- ✓ $2500 Signing Bonus*
- ✓ $500 Referral Bonus*
- ✓ Paying up to 0.70 per mile depending on the experience.
- ✓ Applicants willing to stay 6-8 days out will be given preference.
- ✓ Minimum weekly pay $2200 to $2500.
- ✓ Automatic truck Newer models; Freightliners & Volvos.
- ✓ Dedicated Shipments.
- ✓ Semi Monthly payments; Direct deposits to your Bank.

**MINIMUM REQUIREMENTS:**

- ✓ AZ License Required
- ✓ 6 Months Verifiable Experience
- ✓ Abstract
- ✓ US VISA
- ✓ Drug Test

**Job Type:** Full-time, Permanent

**Salary:** Earn up to $2,200.00-$2,500.00 per week

**Benefits:**

- ✓ Multiple language Dispatch support Available: Tamil, English, Hindi, Punjabi.
- ✓ Group Medical Insurance Plans.
- ✓ Casual dress
- ✓ On-site parking
- ✓ Supplemental pay types:
- ✓ Safety Bonus pay

**Address:** 39 Manstor Rd, Etobicoke, ON M9C 1B1

**You can call/ text/ WhatsApp;** Jay – 647-222-6969 (or) Shivek 902-316-2392
(or) Samuel (Sam) 902-932-7076 EXT#101

**Email:** safety@businessporters.com

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & NIGHTSTAR**
1 bedrooms bsmt for rent. Sep.entrance. Close to Eraa Supermarket. Single, couple preferred. Avail. immediately .
**647.656.1131/416.291.4340**

**MARKHAM & DENISON**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. July 01, 2023. Email: ttrkms@yahoo.ca
**647.938.2300/ 289.554.3529**

**MORNINGSIDE & STAINES**
2 bedrooms bsmt for rent. Sep.entrance, parking & laundry. Avail. immediately .
தொடர்புகளுக்கு: **647.608.1134**

**MARKHAM & DENISON**
2 bedroom bsmt for rent. Also one bedroom available in main floor with parking. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.201.1222**

**BRIMLEY & DENISON**
2 Bedroom bsmt apt for rent. Sep. entrance, parking. Close to Schools. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **416.315.3819**

**MARKHAM & STEELES**
3 bedroom bsmt for rent. Sep. entrance & laundry. Family preferred. No pets, no alcohol & no smoking Avail. immediately.
**647.772.5546/ 647.856.9907**

**MARKHAM & ELLESMERE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. July 01, 2023. No pets, no smoking. No students.
தொடர்புகளுக்கு: **647.675.4799**

**MARKHAM & LAWRENCE**
3 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.710.0231**

**BRIMLEY & DENISON**
2 bedroom bsmt for rent. Sep.entrance, parking & laundry. Close to all facilities. Avail. immediately.
**416.843.0011 / 647.293.8109**

**MARKHAM & DENISON**
2 bedroom brand new bsmt for rent. Sep. entrance & laundry. Avail. immediately.
**647.989.3804 /647.235.4080**

33வது ஆண்டில்
விளம்பரம்
கனடாவின் மூத்த தமிழ் இதழ்
Tel: 416-282-8059
email: vlambaram@sympatico.ca
www.vlambaram.com
www.tamilvanakkam.com

## BASEMENT FOR RENT

**MARKHAM & STEELES**
2 bedroom bsmt for rent . Sep. entrance & laundry. Close to all facilities. No pets, no smoking & no alcohol. Avail. August 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.660.4874**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & SEWELLS**
1 bedroom bsmt for rent. Laundry & parking. Small family or female students or seniors preferred. No pets & no smoke. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.729.4939**

## BASEMENT FOR RENT

**MARKHAM & DENISON**
2 bedroom brand new bsmt for rent. Sep. entrance, internet & Sep. laundry. Close to all facilities. Students / couple preferred. Avail. immediately.
**647.856.9730/647.569.0376**

## BASEMENT FOR RENT

**KENNEDY & 14TH AVENUE**
2 bedroom bsmt for rent. Sep. entrance, kitchen, full wash room & laundry. Close to all facilities. Avail. June 10, 2023.
**Call Sam: 647.891.4484**

## BASEMENT FOR RENT

**MARKHAM & ELSON**
2 bedroom brand new bsmt for rent. Sep. entrance, parking & Sep. laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.418.0477**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & STEELES**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to TTC & all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.917.3186**

## ROOM FOR RENT

**WARDEN & FINCH**
1 Master bedroom with washroom for rent in a Condo. Avail. immediately.
**647.666.4691 / 416.219.9764**

**MIDLAND & ELLESMERE**
1 bedroom for rent in main floor. Couple preferred. Close to school, retail, Tim Hortons, TTC & RT. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.403.3127**

**MIDDLEFIELD & STEELES**
2 bedrooms for rent. Parking & laundry. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு:: **647.829.5979**

**MARKHAM & ELLESMERE**
Room for rent with food. Couple / Seniors preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு:: **647.667.0482**

**NEILSON & MCLEVIN**
2 Bedrooms for rent in a Condo. Male preferred. Close to TTC & all the facilities. Avail. June 01, 2023.
தொடர்புகளுக்கு: **416.629.0065**

**MARKHAM & STEELES**
1 bedroom for rent in a upstair house .Cable, internet, utilities & laundry. Single working lady preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.720.5387**

**BRIMLEY & EGLINTON**
1 bedroom for rent in a bsmt. Sep. entrance. Working female or students preferred. Avail.immediately.
தொடர்புகளுக்கு: **647.238.9061**

## ROOM FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
1 large bedroom for rent in a Condo. Sep.washroom & parking. 2 people can share the room. Male preferred. Close to all the facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.688.6642**

## HOUSE FOR RENT

**MORNINGSIDE & MCNICOLL**
**3 Bedroom house for rent.** Also 2 bedroom bsmt available for rent. Sep. entrance. Avail. immediately .
தொடர்புகளுக்கு: **416.258.3256**

**MARKHAM & ELSON**
3 bedroom semi detached townhouse for rent. Parking & laundry. Avail. July 01, 2023.
தொடர்புகளுக்கு: **647.893.6491**

**MARKHAM & SHEPPARD**
3 Bedrooms main floor, 1 bedroom basement, sep. entrance, laundry & parking. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **289.923.3062**

**9th LINE & HWY 7**
2 Bedrooms house for rent. Laundry & parking. Close to all the facilities. Avail. Immediately.
தொடர்புகளுக்கு: **416.807.6641**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom bsmt for rent. Sep. entrance, laundry & parking. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.567.1764**

## BASEMENT FOR RENT

**MIDDLEFIELD & FINCH**
2 Bedroom brand new bsmt for rent. Sep. entrance, laundry & internet. Close to TTC, Datta Food & Woodside Mall. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.278.8723**

## BASEMENT FOR RENT

**MORNINGSIDE & OLDFINCH**
2 bedroom bsmt for rent. Sep. entrance, parking & laundry. Close to school,TTC & other facilities. Avail. immediately.
**416.825.0566/647.502.8680**

## BASEMENT FOR RENT

**9TH LINE & HWY 7**
1 bedroom brand new bsmt for rent . No sep. entrance, parking & shared laundry. No pets, no smoking & no alcohol. Avail. immediately. **Please call after 6 pm. 647.863.3784**

மேலும் பக்கங்கள் 13,14,15

## ROOM FOR RENT
**MCCOWAN & FINCH**
1 Bedroom for rent in an apartment. Shared kitchen & laundry . Close to Woodside Mall, TTC & all the facilities. Ladies preferred. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **437.288.8075**

## ROOM FOR RENT
**SALEM & ROSSLAND**
Room for rent in a house. Parking available. Ladies preferred. One person - $850 all included. Close to Amazon and other facilities. Avail. immediately.
**438.879.6064 / 514.965.6064**

## HOUSE / BASEMENT FOR RENT
**BIRCHMOUNT & ST.CLAIR**
3 bedroom house for rent. Also 1 bedroom bsmt with Sep. entrance, 2 parking,& laundry. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 416.268.8855**

## ROOM FOR RENT
**WHITES & TAUNTON**
2 Rooms for rent. Each room has separate washroom. Students/ working ladies preferred. Close to all facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு**: 647.298.5523**

## HOUSE FOR RENT
**TAUNTON & SIMCORE**
3 bedroom bungalow house for rent. 2 parking. 5 mins. walk to bus & 5 mins. drive to U O IT Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.388.5295**
**Email: mnitku58@yahoo.com**

## HOUSE FOR RENT
**MORNINGSIDE & SHEPPARD**
3 bedroom town house with walk-out bsmt for rent. Laundry, 2 parking. Close to hwy 401, School, Walmart & Rouge Bakery. Avail. Sep. 01, 2023.
தொடர்புகளுக்கு**: 437.215.5739**

## HOUSE FOR RENT
**SHEPPARD & BRIMLEY**
5 Bedroom bungalow house for rent. Laundry & parking. Close to AginCourt High School, Scarborough Town Center, TTC & all the facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.999.4842**

## HOUSE FOR RENT
**MIDLAND & STEELES**
3 bedrooms house for rent. Close to school & TTC. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **416.908.6810**

## HOUSE/BASEMENT FOR RENT
**TAPSCOTT & CROWTRAIL**
1 Bedroom basement for rent.
STAINES & MORNINGSIDE
2 Bedroom walkout basement for rent.
3 Bedrooms house for rent.
Contact: **647.686.8590**

## முதியோர் பராமரிப்பு
முதியோருக்கு 24 மணி நேர பராமரிப்பு மற்றும் சுடச்சுட உணவு இலங்கை முறைப்படி சமைத்து வழங்கப்படும். நீண்ட கால குறுகிய கால பராமரிப்பு வசதி வழங்கப்படும்.
**647.512.9820/647.868.2440**

## BASEMENT FOR RENT
**MARKHAM & STEELES**
2 bedroom + den bsmt for rent. Sep.entrance, Parking & laundry. Close to Amazon, Canada Post, TTC, YRT, Major Banks, Srilankan grocery stores & all other facilities. No pets, no smoking & no alcohol. Working female or students preferred. Avail. June15, 2023.
**Please Contact 647.284.2735**

## BASEMENT FOR RENT
**THICKSON & TAUNTON.**
Renovated 2 bedroom plus den, walkout bsmt for rent. 2 full washroom, laundry & 2 car parking. Available immediately.
**Please call Monday & Tuesday : Any time.**
**Wednesday to Saturday: 8:00 am to 3:00 pm**
**905.327.3360**

## HOUSE FOR RENT
**NEILSON & FINCH**
4 + 1 bedroom house for rent.
1 bedroom in the bsmt. 2 parking with the garage. 1 min. walk to TTC - 24 hrs. bus service. Close to Malvern Mall, Doctors offices, Srilankan grocery stores & all other facilities.
**Avail. immediately. Email: maison.sothi@gmail.com**
தொடர்புகளுக்கு: **416.297.4100 / 416.728.9019**

## *BASEMENTS FOR RENT*
(1) Ajax Basement Available **Salem &Taunton**,1 bedroom, kitchen, 1 washroom separate entrance, Two car parking.
(2) Pickering Basement Available. **White Road& Taunton** 2 bedroon,1washroom, separate entrance,2 car parking.
(3) **Markham** Basement - 2 bedroom,1washroom, Kitchen separate entrance. தொடர்புகளுக்கு: ***647. 282.5782***

## ROOM FOR RENT
**MORNINGSIDE & SEWLLES**
Multiple bedrooms available with bathroom & kitchen.
தனித்தனி அறைகளாகவும் கொடுக்கப்படும். Close to TTC (2 Buses).
Contact owner about renting price.
தொடர்புகளுக்கு: **416.908.9494**

## LAND FOR SALE IN JAFFNA
திருநெல்வேலி - கோண்டாவில் எல்லையில் உள்ள **3.9** பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு. கிணற்று பங்கு வசதி உள்ளது. திருநெல்வேலி சந்தை மற்றும் யாழ். பல்கலைக் கழகம் மிகவும் அண்மையில் உள்ளது.
தொடர்புகளுக்கு அழையுங்கள் **416.357.1252**

## ROOM / HOUSE FOR RENT
**MARKHAM & DENISON**
1 large bedroom with sep. washroom for rent. 2 or 3 people can share - male preferred. $1400 per month including utilities. No kitchen available.
Also 5 bedroom **house** for rent at **BRIMLEY & SHEPPARD.**
2 full washrooms. $4200 per month + 100% utilities. No alcohol, no smoking & no pets. Close to all the facilities. Avail. immediately.
தொடர்புகளுக்கு: **647.507.2148 / 647.864.1051**

## MODERN LUXURY HOUSE FOR SALE IN JAFFNA
5 BEDROOMS BEAUTIFUL, LUXURY & MODERN NEW 2,500 Sq. feet HOUSE FOR SALE IN JAFFNA.
**VERY CLOSE TO JAFFNA TOWN.**
புதிதாகக் கட்டப்பட்ட 5 பெரிய அறைகள் கொண்ட வீடு (2 பரப்பு காணியுடன்) விற்பனைக்கு உண்டு.
தொடர்புகளுக்கு அழையுங்கள்: **416.303.0920**

## HOUSE / BASEMENT FOR RENT
**MCCOWAN & STEELES**
4 bedrooms house for rent. **Avail. July 01, 2023.**
Also 2 bedroom bsmt for rent. Sep. entrance, sep.laundry & parking. Close to all facilities. **Avail. immediately.**
**WESTNEY & TAUNTON**
4 bedrooms detached house for rent **. Avail. immediately.**
தொடர்புகளுக்கு: **416.836.0010**

## வாகன போக்குவரத்து

விமானநிலையம், நயகரா நீர்வீழ்ச்சி மற்றும் நீண்ட தூர, குறுகிய தூரப் பயணங்களுக்கு

அழையுங்கள்: **416.880.5952**

## ஜோதிடம்

உங்களின் பிறந்த நேர அடிப்படையில் உங்களிற்கான இறந்த கால, நிகழ்கால, எதிர்காலப் பலன்களை அறிந்து கொள்ளலாம். ஜாதக்குறிப்பு எழுதுதல், திருமணப்பொருத்தம் பார்த்தல் (பொருத்தம் சரியாக அமையாதுவிடில் அதற்கான கட்டணம் செலுத்தத் தேவையில்லை), முகூர்த்த நேரங்கள் கணித்தல், பிரசன்ன ஜோதிடம், நினைத்த காரியங்கள் சரியாக அமைவதற்கான கேள்வி பதில்கள்...

சத்தியா - **416.209.4115**

(பாரம்பரிய ஜோதிடத்தை திருக்கணித முறைப்படி கற்றவர்)

## வாடகைக்கு

4 BR, 3 BR, 2 BR, 1 BR House, Condo, Basement

**647-861-8240**

## STORE FOR LEASE

**MIDLAND & MCNICOLL**
**2190 McNicoll Ave.**

We have a store (space) for sub - lease. Good for Taxation & Insurance purposes. Convenient location.

Please Contact **416.731.3469**

## BOOK KEEPING JOB AVAILABLE

**LOOKING FOR AN OFFICE HELPER.**

Knowledge and Experience of Quick Books & Accounting is an asset.

Part time or Full time job available.

Please Contact. **647.802.7021**

## JOBS AVAILABLE

**Established name brand hotel North of Barrie looking for Front Desk and Night Audit employees.**

**If interested, please send your resume to Rajiv.Mahendran@Hilton.com**

## HOUSE KEEPING JOB AVAILABLE

**9th LINE & 14th AVENUE**இல் அமைந்துள்ள வீடு ஒன்றில் பகுதி நேரம் வேலை செய்வதற்கு பெண் உதவியாளர் தேவை.

Looking for a **HOUSE KEEPER to do Laundry, cooking & cleaning. Will pay $1000 Cash per month for part time.** Permanent Job. Full time also available.

ஆர்வம் உள்ளவர்கள் தொடர்புகொள்ளவும். **647.802.7021**

வீடு, அறை, நிலஅறை (BSMT), கட்டிடம் வாடகை / விற்பனை விளம்பரங்களை 5 நாட்களுக்கு முன்பாகத் தரவும்.

## INFINITY FINANCIAL CARE

### NEED TRUE LEADERS

**We are expanding our business and looking for people who are self–motivated and energetic to start a business to help families. Free training, guidance and support will be provided Are you or someone you know looking for part time or full–time opportunity?**

### முகவர்கள் தேவை

சுய உந்துதல், ஆற்றல் மிக்க நபர்களைத் தேடுகிறோம். இலவச பயிற்சி, வழிகாட்டுதல் மற்றும் ஆதரவு வழங்கப்படும். பகுதி நேரம் மற்றும் முழு நேரம் வாய்ப்பைத் தேடுகிறீர்களா? அழைக்கவும்:

**Kuga @ 437–973–2114 / Infinityfinancialcare@gmail.com**

## MANAGER, COOK & WAITRESS WANTED

VICTORIAPARK & HWY 401 (Scarborough) இல் அமைந்துள்ள ENGLISH PUBக்கு Experienced MANAGER, LINE COOK & WAITRESS wanted immediately. FULL TIME / PART TIME.

**Please Contact at 416.566.9994**

## JOBS AVAILABLE

**COURTIES** (5 mins. from Oshawa)இல் அமைந்துள்ள **Anchor Point Fusion Bar and Grill** இற்கு **KITCHEN COOK** தேவை. Full time position.

அனுபவம் உள்ளவர்களும் ஆர்வம் உள்ளவர்களும் தொடர்புகொள்ளவும். **416.618.6704**

## JOB AVAILABLE

Full time & part time jobs available at a busy Canadian Restaurant in Durham Region. Looking for **Front House Manager & Cook.** Immediate positions available.

தகுந்த சம்பளம் மற்றும் சலுகைகள் உண்டு.

Please call KRIS: **647.802.7021**

Email: **restaurantjobhiring@gmail.com**

## JOB JOB JOB

Line cook (full time), Dishwasher (part time) needed for a busy restaurant - OakSide Bar & Lounge, in Markham / Stouffville. Immediate positions available. Line cook ,Dish washer போன்ற வேலைகளிற்கு அனுபவமுள்ள ஆட்கள் உடனடியாகத் தேவை. சம்பளம் மற்றும் சலுகைகள் பேசித் தீர்மானிக்கலாம். **Good Pay & Benefits available**

தொடர்புகளுக்கு: **647.406.2405**

## JOBS AVAILABLE

**COOK & CASHIERS NEEDED FOR A CAFETARIA IN SCARBOROUGH AREA.** சமையல் வேலை மற்றும் cashiers போன்ற வேலைகள் செய்வதற்கு ஆட்கள் தேவை. ஆர்வம் உள்ளவர்கள் தொடர்பு கொள்ளவும்.

**Please Call Vinod. 647.707.2935 / 647.707.6571**

## BUS SERVICE

உங்கள் அனைத்துவிதமான போக்குவரத்து தேவைகளிற்கும் **(Temple visits, Weddings, Niagara falls, Texas, Florida Quebec, Vancouver) 12 seated, 15 seated BMW, LEXUS , LEMO** போன்ற வாகனங்களில் **AC & TV** போன்ற வசதிகளுடன் குதூகலமாக சென்றுவரஅழையுங்கள்.

**Thana @ 416.400.4298**

## MATH & PHYSICS TUTORING

By a well-qualified and experienced teacher

For all grades from Grade 4 to 1st year of university

*Special classes*

- .Advanced function
- .Calculus & vectors
- .Data management

**All Classes available in Scarborough & Stouffville**



Mr.S.F.Xavier (Teacher)

**Contact: 647.340 .9490 / 416.732.2228**

# STACK TOWN HOUSE FOR SALE

HOT PROPERTY

5% Down Only

$669 000



- 3 Bedroom
- 2 Full Washrooms
- Practical Layout
- Beautiful Modern Kitchen
- Laminated floor
- Fridge, stove, Washer, Dryer & B/I Microwave.
- Close to all Amenities
- Ellesmere & Birchmount

for further details :



TISI PARA
Real Estate Agent
(647) 296-0596

HOMELIFE

HomeLife/GTA Realty Inc., Brokerage*
O : 416-321-6969 F: 416-321-6963

# COOK & WORKING PARTNER WANTED

**Scarborough, Windsor, London, Milton**இல் புதிதாகத் திறக்கப்படவுள்ள **Restaurant**க்கு **Canadian, Srilankan, Italian, Indian** மற்றும் **Bakery**இல் சமையல் அனுபமுள்ளவர்கள் ஆர்வமிருந்தால் தொடர்புகொள்ளவும்.



சம்பளம் பேசித்தீர்மானிக்கலாம். தூரத்தில் இருந்து வருபவர்களுக்கு தங்கும் இடவசதி தேவை ஏற்பட்டால் ஒழுங்கு செய்து தரப்படும்.

அத்துடன் **Working partner** ஆக இணைய விரும்புபவர்களும், **Restaurant** ஐ வாடகைக்கு எடுத்து நடத்த விரும்புபவர்களும் தொடர்பு கொள்ளலாம்.

தொடர்புகளுக்கு : **416.294.9677**

# wpm Property Management

Unit #210 – 80 Corporate Dr, Scarborough, ON, M1H 3G5

**Available for Rent**

***Ajax*** **– Rossland/Audley - Townhouse**
(4Brm + 3Bath) **[$2,900/m]**
***Aurora*** **– Bayview Ave/Vandorf Side Rd - Detached**
(4+1Brm + 4Bath) **[$3,900/m]**
***Niagara Falls*** **– Palmer/Cookman - Detached**
(3Brm + 1Bath) **[$2,700/m]**

**Available for Rent**

***Toronto*** **– Bathurst/Lakeshore – Condo**
(1Brm + 1Bath) **[$2,295/m]**
***Toronto*** **– Wilson Ave/Allen Rd – Condo**
(2Brm + 1Bath) **[$2,600/m]**
***Whitechurch - Stoufville*** **– Hoover Park/Ninth Line – Detached**
(4+1Brm + 4Bath) **[$3,700/m]**

## BUY / SELL/ LEASE / INVEST

- வீடு ஒன்றை வாங்கி வாடகைக்கு விட்டு வருமானம் தேட விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுக்கும்போது சரியானவர்களைத் தேர்ந்தெடுத்துக் கொள்வது என்ற குழப்பம் அல்லது பயம் இருக்கிறதா?
- இப்போது வசித்துவரும் வீட்டில் இருந்தே கடன் பெற்று இன்னுமொரு வீட்டை எப்படித் தெரிவு செய்து வாங்குவது என்று அறிய விரும்புகிறீர்களா?
- வாடகைக்குக் கொடுத்திருக்கும் வீட்டின் வாடகைப் பிரச்சனைகளைக் கையாளத் தகுந்த நிறுவனத்தைத் தேடுகிறீர்களா?

Real Estate & Property Management துறையில் 32 வருடங்கள் அனுபவமுள்ளவரைத் தொடர்பு கொள்ளலாம்.

கரு கந்தையா - 416.616.7278 Watson Property Management - 416.284.9999

We are managing Condos, Houses, Apartments in the area of Toronto, Markham, Ajax, Whitby, Oshawa, Clarington, Brampton, Hamilton, Beaverton, Trenton, and Kingston.

# சாதி...

09ஆம் பக்கத்தொடர்ச்சி

**சோழர்களின் ஆட்சியைப் பொற்கால ஆட்சி என்றும், அது ஓர் முற்போக் கான ஆட்சி என்றும், ஜனநாயகப் பண்போடு சோழர்கள் இருந்தனர் எனவும் ஒரு தரப்பு கூறுகின்றனர். இதை ஏற்றுக்கொள்வீர்களா?**

பொற்கால ஆட்சி என்று சொல்வதையும் நான் ஏற்றுக்கொள்வதில்லை. மாறாக சோழர்களின் ஆட்சி ஒரு வலிமையான ஆட்சி என்று நான் சொல்லுவேன். நானூறு ஆண்டு காலம் தமிழகம் முழுமையும் ஒரு குடையின் கீழ் ஆண்ட ஆட்சியாக சோழருடைய ஆட்சி இருந்தது. அதுபோல வரி விதிப்பதற்காக நாட்டையே முழுமையாக அளந்து மண்டலங்களாக, கோட்டங்களாக, நாடு களாக, கிராமங்களாகப் பிரித்து அவற்றிற் கான வரி வசூலை ஒழுங்குபடுத்தி, முறையான வரி வசூலை செய்தனர். கோவில்களில் தவறு நடந்தால் தணிக்கை



செய்யப்பட்டிருக்கிறது. இவ்வாறாக நிர்வாக முறையைக் கட்டமைத்து ஸ்திரமிக்க ஆட்சியை கட்டமைத்ததற்கு சோழர் காலத்தைத்தான் நாம் எடுத்துக்காட்டாகக் கொள்ளவேண்டும். தமிழகம் எங்கும் நிறைய கோவில்கள் கட்டப்பட்டன. ஓர் ஊரை நிர்வாகம் செய்வதற்குரிய நிர்வாக அமைப்பாகக் கோவிலை சோழர்கள் நிர்வகித்தனர்.

**சோழர்கள் குறித்துப் படிக்கும்போது அனிருத்த பிரம்மராயர், பரகேசரி, ராஜராஜ சோழ ராஜகேசரி போன்ற வார்த்தைகள் வருகின்றன. இதற்கெல்லாம் என்ன பொருள்?**

பரகேசரி என்பது சமஸ்கிருதச் சொல். கேசரி என்றால் சிங்கம் என்று பொருள். பரகேசரி என்றால் வேற்று நாட்டு மன்னர்களுக்கு சிங்கம் போன்றவன் என்று பொருள். ராஜகேசரி என்றால் ராஜாக்கள் பலருக்கும் சிங்கம் போன்றவன் என்று பொருள். தன்னை உயர்த்திச் சொல்வதற்கான பட்டம் இது. சோழர்களுக்கு உரியது. அப்பா பரகேசரி என்றால் மகன் ராஜகேசரி என்று பட்டம் சூட்டிக்கொள்வான். அதேபோல பாண்டியர் களும் மாறவர்மன், சடையவர்மன் என்ற பட்டத்தை சூட்டிக்கொள்வர்.

**மூவேந்தர்களையும் தங்கள் சாதியினராகக் கூறி, ஆண்ட சாதி பரம்பரை நாங்கள் என்று கூறுவது தமிழ்நாட்டில் இன்று வழக்கமாக இருக்கிறது. மூவேந்தர்களின் சாதி குறித்து ஆதாரங்கள் ஏதாவது கிடைத்துள்ளதா?**

மூவேந்தர்கள் பற்றிய சாதி தகவல்கள் எந்த கல்வெட்டிலும் இல்லை. அவர்கள் தங்களைச் சத்திரிய சிகாமணி என்றுதான் சொல்லிக்கொண்டனர். சத்திரிய சிகாமணி என்றால் போர் வீரர்களில் மணி போன்றவன் என்று பொருள். சத்திரிய சிகாமணி வளநாடு என்றுதான் ஆண்ட பகுதிக்கும் பெயர் சூட்டினர். தங்களை, மன்னர் மரபு என்பதை, நால்வர்ணப் பகுப்பிலே சத்திரியர்கள் என்றுதான், அதாவது ராஜாக்கள் என்று சொல்லிக் கொண்டதால், இவர்கள் தங்களை சத்திரிய பரம்பரை என்று சொல்லிக் கொண்டனர். என்ன சாதி என்று வெளிப் படையாக மூவேந்தர்கள் காட்டிக் கொள்ள வில்லை. நாம் அடையாளப்படுத்த வும் முடியாது. முற்றும்

# இடுக்கண் களைவதாம் நட்பு



யதுசனா சவுந்தரராசா

ஒரு மனிதன் தன் வாழ்வில் பெறக்கூடிய பெறுமதியான சொத்துக்களில் ஒன்று நட்பு. இது இல்லாமல் வாழ்க்கை முழுமை அடைவதில்லை. ஐந்து வயதில் ஏடு பிடிக்கத் தொடங்கும் காலம் முதல் ஆயுள் வரையிலும் கிடைக்கும் அனைத்து நட்புக்களும் பெறுமதி மிக்கவை.

எதிர்பார்ப்புக்கள், நிபந்தனைகள் எதுவு மற்று பரஸ்பரமாக இரு நபர்கள் ஒருவர் மீது ஒருவர் அக்கறை கலந்த பாசம் வைப்பது நட்பு எனப்படுகிறது. நட்பு: ஜாதி, மதம், பால் கடந்து தோன்றுவது. வாழ்வின் நிலைத்திருப்பை அர்த்தமுள்ள தாக்குவது. எவ்வித இரத்த பந்தமும் அற்ற இருவர் ஒருவருக்கொருவர் உண்மையான அன்பு, அக்கறை மற்றும் பாசத்தைப் பகிர்ந்து கொள்ளும் இப்புனித உணர்வு அனைத்திலும் மேலானது.

இருவர் தமக்கிடையே பொதுவான விருப்பு வெறுப்புக்களைக் கொண்டிருக்கையில் அங்கு இயல்பாகவே நட்பு உருவாகின்றது. ஆரம்பப் பள்ளியில் எமக்குப் பக்கத்து இருக்கையில் அமரும் மாணவருடன் செய்து கொள்ளும் அறிமுகத்தில் தொடங்கும் நட்பு ஆயுள் வரையிலும் பல தருணங்களிலும் புதிதாய்ப் பூத்தவண்ணமே இருக்கும். ஒரு நண்பரோ பல நண்பரோ தம் வாழ்வில் நண்பன் எனக் கூறிக்கொள்ள ஓர் உறவைப் பெற்ற அனைவருமே அதிர்ஸ்டசாலிகள்.

மனிதனாக பிறந்த அனைவருமே உணர்வு ரீதியாக ஒருவரில் ஒருவர் தங்கியே வாழ்கின்றனர். யாராலுமே வாழ்வை தனிமையிலேயே கழித்து விட முடிவதில்லை. அவ்வாறு இன்பதுன்பங் களைப் பகிர்ந்து கொள்ளவும், துன்பம் நேர்கையில் தோள்சாய்த்து அழுவதற்கும், ஆறுதல் வார்த்தைகள் கூறுவதற்கும் நல்ல நண்பர்களைப் பெற்றோர் பேறுபெற்றோர்.

நண்பர்கள் ஒருவருக்கு இன்னொருவர் விம்பமாகவே மாறி வருகின்றனர். அது நல்ல செய்கையாயினும், தீய செய்கை யாயினும். "உன் நண்பன் யார் என்று சொல், நான் உன்னைப் பற்றி சொல்கிறேன்." என்றொரு வாசகம் உண்டு. நண்பர்கள் ஒருவரையொருவர் பூர்த்தி செய்கின்றனர் என்றால் மிகையாகாது.

நாம் அன்றாடம் எதிர்கொள்ளும் அனைத்து அனுபவங்களையும் குடும்பத்தி னருடன் பகிர்ந்துவிட முடிவதில்லை. சில சமயங்களில் சகோதரரிடம் சொல்ல முடியாத விடயங்களும் அமையலாம். ஆனால், நட்பு இதற்கு விதிவிலக்கானது. நண்பர்களிடம் நாம் மறைக்கும் விடயம் என்று எதுவுமில்லை. மறைத்தால் அங்கு ஆரோக்கியமான நட்பு இல்லை என்று அர்த்தம். எம்மைப் போலவே ஒரே வகையான சிந்தனையைக் கொண்டவரான நண்பர்கள் எம் பிரச்சினைகளையும் எம் பார்வையைப் போலவே புரிந்து கொள்வார்கள்.

எல்லாவற்றையும் இழந்து, இழப்பதற்கு எதுவுமில்லை என்ற நிலை வந்த போதிலும், எந்தவொரு எதிர்பார்ப்பின்றியும் அருகிலிருந்து ஆறுதல்படுத்தும் நண்பன் கிடைப்பது வரமே. உடலின் இயக்கத்துக்கு எவ்வாறு சுவாசமும் நீரும் அவசியமோ அதுபோலவே எம் உளவியல் ஆரோக்கியத்தில் நட்பு செல்வாக்கு செலுத்துகிறது.

"உடுக்கை இழந்தவன் கைபோல ஆங்கே இடுக்கண் களைவதாம் நட்பு" என்றார், நட்புக்காக ஓர் அதிகாரத்தையே அர்ப்பணித்த திருவள்ளுவர்.

விட்டுக் கொடுப்பும், புரிந்துணர்வும் நட்பின் நிலைப்புக்கு அவசியமான இரு அம்சங்கள். சிறு கருத்து வேறுபாடுகளுக்கு அதிக முக்கியத்துவம் கொடுத்து நல்ல நட்பை இழந்தோர் பலர். புதிய நண்பர்களை எப்போதும் பெற்றுக்கொள்ளலாம். ஆனால், ஒருயிர் ஈருடல் என இருந்த நண்பர்கள் இருவர் தம்மிடையே எந்த சம்பந்தமும் இல்லை என்ற நிலையை அடைவதை பார்ப்பது வேதனை தரும் விடயம் ஒன்று. எதிரிகளின் வார்த்தையை விட ஒரு நல்ல நண்பனின் மௌனம் வலிமை மிக்கது என்பர். முடிந்த வரையிலும் நட்புக்களை அவை முறிந்து போகாவண்ணம் பேணுவோம்.



எம் வாழ்வில் அழகான தருணங்களை தருபவர்கள் நண்பர்கள். பள்ளிக்காலம் முதற்கொண்டு நம் பேணிக் காக்கும் வாழ்வின் பல்வேறு நொடிகளின் ஞாபகங்களிலும் எம் நண்பர்களின் புன்னகை பூத்த முகமும் ஒளிபரப்பிக் கொண்டிருக்கும்.

"நட்பு என்பது வரையறுப்பதற்கு கடினமான ஒன்று. அது பாடசாலையில் கற்பிக்கப்படும் பாடம் அல்ல. ஆனால் நட்பைக் கற்கத் தவறின், நீங்கள் எதுவுமே உண்மையில் கற்கவில்லை" என்றார் முகமது அலி. ஒரு நல்ல நண்பன் கிடைக்க வேண்டும் என்றால் அதற்கு வழி, நீ ஒரு நல்ல நண்பனாக இருப்பதுவே என்பர். நட்பு என்பது பரஸ்பரமான புரிந்துணர்வு உடையது. அது ஒரு வழியானதாக மட்டுமே அமைவது நட்புக்கு ஆரோக்கியமானதல்ல.

எம் வாழ்வு எனும் தோட்டத்தின் சேதமுற்ற வேலிகளையும் தாண்டி அதில் மலரும் பூக்களை இரசிப்பவர்களே நண்பர்கள். எவ்வளவு காலம் நண்பர்களாயிருந்தோம் என்பதை விட எதுவந்த போதிலும், உங்களை விட்டு விலகாத நண்பர்களே, வாழ்வின் வரங்கள். வாழ்வில் நாமாகத் தேர்ந்தெடுத்துக் கொள்ளும் குடும்பமே நண்பர்கள்.

உறவினர்கள், குடும்பம் இல்லாமலும்கூட ஒருவர் வாழ்ந்து விடமுடியும். ஆனால், நண்பர்கள் இன்றி யாரும் இருந்து விடுவதில்லை. வாழ்வில் ஏதோவொரு கட்டத்திலேனும் நட்பு மலரும். அவ்வாறு எம் வாழ்வை ஒளியூட்டும் நண்பர்களை நாமும் இயன்றவரை பரஸ்பர அன்பை வழங்கி "நட்பைக் கூட கற்பைப் போல எண்ணுவேன்" எனும் பாடலடிக்கேற்ப என்றும் போற்றுவோம்.

# நானிலம்...

08ஆம் பக்கத்தொடர்ச்சி

என்பது கருத்து. "ஒருவர் பொறை இருவர் நட்பு" என்பது பழமொழி.

பழமொழி நானூறு - பாடல் 125
நண்பர்க்கு உதவ வேண்டும்
"பரியப் படுபவர் பண்பிலார் ஏனும்
திரியப் பெறுபவோ சான்றோர் - விரிதிரைப்
பாரெறியும் முந்நீர்த் துறைவ! "கடனன்றோ
ஊறறிய நட்டார்க்கு உணா"

பரந்த அலைகளை கரையாகிய பாரிலே வந்து மோதுகின்ற கடற்கரைக்கு உரிய தலைவனே! தம்மால் விரும்பிப் பாதுகாக்கப்படுவர் பண்பற்றவர்களாக இருந்தாலும், சான்றோர்கள், அதனால் தங்கள் தன்மையினின்றும் சற்றும் மாறுபாடு அடைவார்களோ? மாட்டார்கள். ஆகையால், ஊர் அறிய நம்முடன் நட்புச் செய்தவர்க்கு உணவளிப்பதும் நம் கடமை அல்லவோ?

நட்டார் குணக்கேடரானாலும், சான்றோர் அவர்க்கும் உதவுவதையே தம் கடனாகக் கொள்வார்கள் என்பது கருத்து. "கடனன்றோ ஊறறிய நட்டார்க்கு உணா, என்பது பழமொழி. ஊறறிய நட்டார்க்கு உதவா விடின் ஊர்ப்பழிக்கு உள்ளாகல் நேரும் என்பதாம்.

நீதி நூல்கள் சிலவற்றில் நட்பு பற்றிய அறிவுரைகளை ஆராய்ந்தோம். நாமும் வாழ்வோம். நம்மைச் சூழவுள்ளவர்களும் நன்றாகவே வாழட்டும். "நானிலம் போற்றும் நட்பு" என்ற தலைப்பில் தொடர்ந்து உரையாடுவோம். (தொடரும்)

# சிலுசிலுப்பின் இயக்கம்

தலைமயிர் நரைத்த முதியோரிடமும்
இதயம் கனியும் காதல் உணர்வுக்கு
முள்வேலியாய் நிலைத்திருக்கின்ற
பண்பாடு ஒழுக்கம் மரபுக் கூறுகள்

மரக்கிளைகளில் மறைத்துக் கட்டிய
துணிக் கூரையின்கீழ்
நடைபெறுகின்றது இல்லற வாழ்க்கை

உடுதுணியை ஒடுகின்ற வாய்க்காலில்
துவைத்து மரக்கிளையில் உலரவிட்டு
இறுக்கிக் கட்டிய கோவணத்துடன் துணி
காயும்வரை
குந்தியிருந்து பார்த்திருப்பவருக்கு
மாற்றிக்கட்டத் துணியற்ற வறியநிலை.

மூன்றாகப் பிரியும் நெடுஞ்சாலையின்
இடைவெளியில்
குடிசைகளின் முன்னே வைத்துள்ள
நெகிழிக் குண்டானுள் நிரப்பிய
தண்ணீரில் ஆடை உடலில் ஒட்டி
உறவுகொள்ள நீராடி வெப்பம் தணிக்கும்
அழகிய சிற்பங்கள்.

கோடி பணக்குன்றுகள் மதில்களில்
ஒட்டிய தேர்தல் விளம்பரங்களை
மேய்ச்சல் தெரு மாடுகள் உரித்துத்
தின்கின்றன.

பின் இருக்கையால் சறுக்கி விழுந்து
பிடரி அடிபட்டு ஆயுளை முடித்த
இளவயது ஆசிரியரின் இயமன்
இருசக்கர வண்டியில்,
மெழுகுவர்த்தி ஏந்திநின்று துயர் பகிரும்
மாணவமணிச் செல்வங்கள்.

சுனாமி அழிப்பேரலையில், உள்நாட்டுப்
போரில் வாழ்க்கைத் துணையை,
பிள்ளைகளை, உறவுகளை இழந்து
அவதியுற்றபோதும் பதியெழு அறியாத
பழங்குடி வழிவந்த மண்பற்றில்
வாழ்ந்துவரும் ஆணிவேர்கள்.

"இந்த விமானம் தரை தொட்டால்தான்
நமது உயிரும் உழைப்புத் தொடரும்"
என்றவாறு மொழி மத நிற பேதமற்றுச்
சிந்தித்துக்கொண்டு தினமும் உலகை
வலம் வருகின்ற பயண வானூர்திகள்
பூமியின் தரை தொட்டதும்,

அவர்களுக்குள் எத்தனை பிரிவுகள்
வேறுபாடுகள்!



முத்துராஜா

யோக சோதிடம்
கிரகப்பொருத்தம் பார்த்தல் சுபமுகூர்த்தம் கணித்தல்
சாதகக் குறிப்புக் கணித்தல் பலன் பார்த்தல்
தொடர்புகளுக்கு: 416.299.8361

# சாகுந்தலம் – திரைவிமர்சனம்



ஆரணி ஞானநாயகன்

மகாபாரதத்தில் முதல் உருவாகி பின்பு கவிஞர் காளிதாசரின் நாடகத்தால் புகழ் பெற்ற சகுந்தலையின் கதை பலமுறை படமாக எடுக்கப்பட்டுள்ளது. இம்முயற்சி களில் அண்மையில் எடுக்கப்பட்ட படம் சமந்தாவின் நடிப்பில் 2023 ஏப்ரலில் வெளிவந்தது. தெலுங்கு மொழியில் எடுக்கப்பட்ட இப்படம் தமிழிலும் வெளிவந்தது.

விஸ்வாமித்திரரின் தவத்தின் பலத்தைக் கண்டு அஞ்சிய இந்திரன், தனது சபையில் ஆடும் மேனகையை தவத்தைக் கலைக்க அனுப்புகிறார். தனது முயற்சியில் வெற்றியடைந்த மேனகை, விஸ்வாமித்திரருடன் ஒரு பெண் பிள்ளை பெறுகிறார். ஏமாற்றப்பட்ட விஸ்வாமித்திர ரும் இந்திரலோகத்தைச் சேர்ந்த மேனகையும் அக்குழந்தையை வளர்க்கவில்லை.

காட்டில் பறவைகளுடன் வைக்கப்பட்ட அக்குழந்தையை ஒருநாள் கண்ணுவ ரிஷி காண்கிறார். அக்குழந்தையை எடுத்து அப்பறவைகளின் பெயரில் சகுந்தலை எனப் பெயர் சூட்டி, தனது மகளாக வளர்க்கிறார். சகுந்தலையும் தனது வளர்ப்புத் தந்தையின் ஆச்சிரமத்தில் தனது தோழிகளுடனும், காட்டுப் பறவைகளுடனும் பிற மிருகங்களுடனும் வாழ்ந்து வருகிறார்.

கண்ணுவ ரிஷி ஒரு யாகத்திற்காக வேறு இடம் செல்லுகையில் அவரது ஆச்சிரமத்தைக் காக்கத் துஷ்யந்தன் அங்கு நிற்கிறார்.

வேறு ஆண்களுடன் பழகாத சகுந்தலை யிடம் துஷ்யந்தன் தனது காதலைத் தெரிவித்துப் பிறர் அறியாமல் அவரைத் திருமணம் செய்கிறார். கண்ணுவ ரிஷியின் யாகம் முடிந்தபின் துஷ்யந்தன் சகுந்தலை யிடம் தான் அவளை அழைப்பதாகச் சொல்லித் தனியாகத் தனது தலைநகருக்குத் திரும்புகிறார்.

சகுந்தலை துஷ்யந்தனை நம்பி அவருக்காகக் காத்துக்கொண்டு இருக்கையில், அவரது ஆச்சிரமத்திற்கு துர்வாச முனிவர் வந்தார். அவரை சகுந்தலை கவனிக்காததால் துர்வாசர் அவரைச் சபிக்கிறார்.


அந்தச் சாபம் என்ன? சகுந்தலையும் துஷ்யந்தனும் ஒன்று சேர்வார்களா? என இக்கதையை அறியாதவர்கள் இப் படத்தைப் பார்த்து அறியுங்கள்.

பலர் அறிந்த, பலரால் எடுக்கப்பட்ட இக்கதையை வைத்து மீண்டும் ஒரு படம் எடுக்க வேண்டும் என்றால் அப்படம் சிறப்பாகவும், புதுமையாகவும் இருந்திருக்க வேண்டும். இயக்குநர் இதை பிரமாண்டகாட்சிகள் மூலம் சாதிக்க எண்ணினார். ஆனால், இச்செயற்கைக் காட்சிகள் நன்றாக அமையவில்லை. கதைக்குத் தேவையில்லாத அதிக பிரமாண்டமும் தெளிவில்லாத செயற்கை (CGI) காட்சிகளும் படத்தைப்



பாதிக்கின்றன. வசனமும், கதைப்போக்கும் சரிவரவில்லை. எளிய, தெளிவான காட்சிகளை அமைத்து கதையில் அதிக கவனம் செலுத்தி இருந்தால் படம் ன்றாக இருந்திருக்கும்.

சமந்தா சகுந்தலையாக நன்றாக நடித்துள்ளார். ஆனால், அவரது பாத்திரம்



பிறரது செயலுக்கு ஏற்ப அனுபவிப்பதை விட வேறு ஒன்றும் செய்யவில்லை. அவரது நடிப்பின் திறனும் மகாபாரதம் மற்றும் காளிதாசனின் நூல்களில் காணப்பட்ட சகுந்தலையின் கதாபாத்திர மும் படக்கதையுடன் ஒப்பிடும்போது இயக்குநர் அவரை இப்படத்தில் முழுமை யாகப் பயன்படுத்தவில்லை. இருந்தாலும் சமந்தாவும், பரதனாக நடித்த சிறுமியின் நடிப்பும் பார்க்க நன்றாக இருந்தன.

சகுந்தலையின் கதையை தற்காலத் தயாரிப்பில் இன்றைய நடிகர்களுடன் பார்க்க விரும்புவோரும், சகுந்தலையின் கதையை இலகுவான விளக்கத்துடன் அறிய விரும்புவோரும் இப்படத்தைப் பார்க்கலாம்.

- என்றும் நீங்கள் நீங்களாகவே இருங்கள். விரும்பினால் பழகட்டும் வெறுத்தால் விலகட்டும்.
- எனக்குப் பிடிக்காத இடத்திலும் என்னைப் பிடிக்காத இடத்திலும் நான் நீண்ட நேரம் இருப்பதில்லை.

New Project By :

# CHESTNUT HILL

(Universal City)

Flexible Deposit

Completion : Spring 2028



- (4 - 5) % Deposit Per Year till 2027
- Right to Lease during Occupancy
- Pickering had Only 2 Launches in 2021 & 2022
- Free Assignment
- Special Price Discount
- Pickering has Low Supply
- Walk to GO Station

HOMELIFE HIGHER STANDARDS

**HomeLife/GTA Realty Inc.** Brokerage*

5215 Finch Ave. E. Suite 203, Toronto, ON. M1S OC2

Tel: 416-321-6969 * Independently owned and operated.